இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 361 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆடி 25 – வியாழக்கிழமை 10 ஆகஸ்ட் 2023 – வேலூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 361 : Thiruvalluvar Year - 2054 - Aadi 25 - Thursday 10 August 2023 - Vellore 12 Pages ₹ 5.00

## நான் நம்பும் விஷயத்திற்காக உயிரைவிடவும் தயார்! தியாகம் செய்யவும் தயார்!

# மணிப்பூரில் இந்தியத் தாய் கொலை!

## நாடாளுமன்றத்தில் மோடி அரசு மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் ராகுல் காந்தி ஆவேச குற்றச்சாட்டு!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (9.8.2023) பள்ளிக் கல்வித் துறை சார்பில் சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற நாட்டின் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான பாராட்டு விழாவில், அம்மாணவ, மாணவியர்களுக்கு சான்றிதழ் மற்றும் மடிக்கணினிகளை வழங்கி வாழ்த்தினார். இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, இல்லம் தேடிக் கல்வி சிறப்புப் பணி அலுவலர் க.இளம்பகவத், சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் இயக்குநர் முனைவர் வி.காமகோடி, தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் உறுப்பினர் செயலர் இரா.சுதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

டெல்லி, ஆக. 10 -

**“நான் நம்பும் விஷயத்திற்காக உயிரைவிடவும் தயார்! தியாகம் செய்யவும் தயார்! என்றும் மணிப்பூரில் இந்தியத் தாய் கொலை செய்யப் பட்டுள்ளார்” என்றும் நாடாளு மன்றத்தில் மோடி தலைமையிலான ஒன்றிய அரசின் மீது நம்பிக்கை யில்லாத் தீர்மான விவாதத்தில் ராகுல் காந்தி அவர்கள் உரை யாற்றுகையில் குறிப்பிட்டார்.**

மோடி அரசு மீது “இந்தியா” கூட்டணிக் கட்சிகள் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தின் மீது மக்களவையில் நேற்று 2வது நாளாக விவாதம் நடைபெற்றது.

இதில், காங்கிரஸ் கட்சி சார்பில் ராகுல் காந்தி கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு:-

சபாநாயகர் அவர்களே, முதலில் மீண்டும் என்னை மக்களவையில் இணைத்துக் கொண்டதற்கு நான் உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒற்றுமை நடைபயணத்தின் போது அனைத்துத் தரப்பு மக்க ளின் குரல்களையும் கேட்டேன். நான் இன்று பேச தொடங்கிய வுடன் வெறுப்புடன் சிலர் பேசத் தொடங்கினார்கள்; இந்த வெறுப் புணர்வை நீக்க வேண்டும் என்று முடிவெடுத்தேன். ஒற்றுமை யாத்திரையின் மூலமாக நான் நிறைய கற்றுக் கொண்டேன்; உண்மையான இந்தியாவை அந்தப் பயணத்தின் வழியாக நான் பார்த்தேன். நான் மணிப் பூருக்கு நேரில் சென்றேன்.

கடந்த முறை நான் பேசியபோது அதானியை குறித்து பேசியது



உங்களுக்கு பிரச்சினையை ஏற்படுத்தி இருக்கலாம்.

**பா.ஜ.க.வினர் அச்சப்பட வேண்டாம்!**

உங்கள் மூத்த தலைவர்கள் வேதனை அடைந்திருக்கலாம். அந்த வேதனை உங்களையும் பாதித்திருக்கலாம். அதற்காக நான் உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். ஆனால், நான் உண்மையைப் பேசினேன். இன்று நான் அதானி பற்றி பேசப் போவதில்லை. மணிப் பூர் பற்றியே பேசப் போகிறேன் என்பதால் எனது பா.ஜ.க. நண்பர் கள் அச்சப்பட வேண்டியதில்லை.

இதயத்தில் இருந்து பேசும் பேச்சு இதயங்களை சென்றடை யும் என்பதால், இதயத்தில் இருந்து பேசப் போகிறேன். 130 நாட்களுக்கு நாட்டின் ஒரு முனை யில் நடைபயணம் இருந்து மற்றொரு முனைக்கு மக்களுடன் இணைந்து பயணம் நடத்தினேன். என்னுடைய பயணம் இன்னும் முடிவடையவில்லை. பயணத்தின் போதும், அதன் பிறகும் நிறைய பேர் என்னிடம் ஏன் பயணம் செல்கிறீர்கள் என்று கேட்டார்கள். குமரியில் இந்தப் பயணத்தை துவங்கிய போது, நாட்டை புரிந்து கொள்வதற்காகவே இந்திய ஒற்றுமை நடைபயணத்தை ஆரம்பித்தேன்.

**அனைத்தையும் தியாகம் செய்ய தயார்!**

ஒற்றுமைப் பயணத்தில் நிறைய விஷயங்களை கற்றுக் கொண்டேன். நான் நம்பும் விஷயத்துக்காக உயிரை விடவும், பிரதமர் விரும்பி னால் சிறை செல் லவும் தயாராக உள்ளேன். 10 ஆண்டுகளாக பா.ஜ.க.வினரால் நான் அலைக்கழிக்கப்பட்டு உள்ளேன்.

எனது பயணம் துவங்கிய போது பயம் இருந்தது. பயணத்துக்காக அனைத்தையும் தியாகம் செய்ய தயாராக இருந்தேன். இந்தப் பயணத்தில்

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

### ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டுவந்த டெல்லி சேவைகள் சட்ட மசோதாவுக்கு எதிராக தி.மு.க. வாக்களிப்பு!

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கெஜ்ரிவால் நன்றி!

### அரசியலமைப்பை பலவீனப்படுத்தும் சக்திகளுக்கு எதிரான போராட்டத்தில் தொடர்ச்சியான ஆதரவை எதிர்பார்ப்பதாகக் கடிதம்!

புதுடெல்லி, ஆக.10-

நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசு கொண்டுவந்த டெல்லி நிர்வாக மசோதாவை எதிர்த்து தி.மு.க. வாக்களித் தமைக்கு தமிழ்நாடு முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரி வித்து, டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர் கள் கடிதம் எழுதியுள்ளார்.



தலைநகர் டெல்லியை ஒரு மாநகராட்சியைப்போல் தரம் குறைக்கும் வகையில், மாநிலங்களவையில் ஒன்றிய பா.ஜ.க. அரசால் கொண்டு வரப்பட்ட டெல்லி சேவை கள் சட்ட (திருத்த) மசோ தாவினை திராவிட முன் னேற்றக் கழகம் சார்பில் எதிர்த்ததைத் தொடர்ந்து, அதற்கு நன்றி தெரிவித்து டெல்லி முதலமைச்சர் அர விந்த் கெஜ்ரிவால் அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று முன்தினம் (8.8.2023) கடிதம் எழுதியுள்ளார்.

டெல்லி முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள கடி தத்தில், ஒன்றிய அரசு கொண்டுவந்த டெல்லி சேவைகள் சட்ட (திருத்த) மசோதா, 2023ஐ எதிர்த்து வாக்களித்த திராவிட முன் னேற்றக் கழகத்திற்கு, 2 கோடி டெல்லி மக்களின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும், நாடாளு மன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் டெல்லி மக்க ளின் உரிமைகளுக்காகப் போராடியதற்காக மன மார்ந்த பாராட்டுக்களைப் பதிவு செய்வதாகவும் குறிப் பிட்டுள்ளார்.

இந்திய அரசியலமைப் பின் கொள்கைகள் மீது, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கை பல லாண்டுகளுக்கு நினைவு கூரப்படும் என்று தெரிவித் துள்ள டெல்லி முதலமைச்சர் அவர்கள், அரசியலமைப்பை பலவீனப்படுத்தும் சக்தி களுக்கு எதிரான போராட் டத்தில் தமிழ்நாடு முதல மைச்சர் அவர்களின் தொடர்ச்சியான ஆதரவை தாம் எதிர்பார்ப்பதாக தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## திராவிட மாடல் ஆட்சியில்

# பள்ளிக் கல்வியின் தரம் உயர்வு!

## முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் அரசுப் பள்ளி மாணவர்களைப் பாராட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

சென்னை, ஆக. 10 -

**“திராவிட மாடல் ஆட்சியில் பள்ளிக் கல்வியின் தரம் உயர்ந்துள்ளது” என்றும் “முதன்மை உயர் கல்வி நிறுவனங்களில் அரசுப் பள்ளி மாணவர்கள் எண்ணிக்கையை உயர்த்துவோம்” என்றும் முதன்மை உயர் கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் அரசுப் பள்ளி மாணவர்களைப் பாராட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகை யில் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை யில் நேற்று (9.8.2023) பள்ளிக் கல்வித் துறை சார்பில் சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற நாட்டின் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் அரசுப் பள்ளி மாணவர் களுக்கான பாராட்டு விழாவில், அம்மாணவ, மாணவியர்களுக்கு சான்றிதழ் மற்றும் மடிக்கணினி களை வழங்கி, வாழ்த்தி ஆற்றிய உரை வருமாறு:–

பள்ளிக் கல்வித் துறையை பொறுத்தவரைக்கும், தினந்தோறும் மிகச்சிறந்த முன்னெடுப்புகளை எடுத்து வருகிறோம். இருந்தாலும், இன்றைக்கு ஒரு Special Day!

தமிழ்நாட்டினுடைய பள்ளிக் கல்வி வரலாற்றில் ஒரு முக்கியமான நாள்! கொண்டாட்டத்திற்குரிய நாளாக அமைந்திருக்கிறது. அந்த மகிழ்ச்சி யோடு தான் உங்களை எல்லாம் நான் சந்திப்பதற்கு வந்திருக்கிறேன்.

**தமிழ்நாட்டு மாணவர்கள் உயர் கல்விக்குப் போகவேண்டும்!**

உங்கள் பெற்றோருக்கு இருக் கின்ற அதே அக்கறையுடனும், அன்புடனும் நீங்கள் மட்டுமல்ல, தமிழ்நாட்டு குழந்தைகள் எல்லோ ரும் கல்வி கற்கவேண்டும், உயர் படிப்புகளுக்குப் போகவேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன். ஏனென்றால், கல்வி நமக்கு இங்கே சுலபமாக கிடைக்கவில்லை. ஒரு காலத்தில் கல்வி நமக்கு எட்டாக்கனி!

இன்றைக்கு நாம் எல்லோரும் படிக்கிறோம் என்றால், அதற்குப் பின்னால், நம்முடைய முன்னோர்கள் நடத்திய, ஏராளமான போராட்டங் கள்தான் காரணமாக இருக்கிறது.

நீதிக்கட்சி காலத்தில் இருந்து சமூக நீதியை வலியுறுத்தி வரும் சமூக சீர்திருத்தத் தலைவர்களால் தான் இந்த மாற்றத்தை நம்மால் உரு வாக்க முடிந்தது. இந்த மாற்றத்தை இன்னும் சிறப்பாக்க நம்முடைய திராவிட மாடல் அரசு செயல்பட் டுக் கொண்டிருக்கிறது.

**பார்வையற்ற மாற்றுத் திறனாளி இந்திய வெளியுறவுத்துறை அதிகாரி!**

எல்லாவற்றிற்கும் ஒரு தூண்டு தல் அவசியம் தேவை. அதற்கு ஒரு எடுத்துக்காட்டாக சொல்லவேண் டுமென்றால், பீனோ சபீன் என்று ஒருவர். சென்னையைச் சேர்ந்த பெண் அவர். இப்போது, இந்திய வெளியுறவுத் துறை அதிகாரியாக இருக்கிறார்கள். எத்தனையோ அதி காரிகள் இருக்கிறார்கள். ஆனால், இவரை மட்டும் நான் குறிப்பிட்டுச் சொல்வதற்கு என்ன காரணம் என்னவென்று கேட்டீர்கள் என் றால், அவர் பார்வையற்ற மாற்றுத் திறனாளி.

இந்தியாவிலேயே முதல் பார்வை யற்ற இந்திய வெளியுறவுத் துறை (IFS) அதிகாரி என்ற பெருமை கொண்டவர் அவர். கடந்த 2006ஆம் ஆண்டு, அவர் School Studentஆக இருந்தபோது, அமெரிக்காவில் நடத்தக்கூடிய ஒரு கருத்தரங்கில் கலந்துகொள்ள நிதி உதவி கேட்டு, ஒரு கோரிக்கை வைத்தார்.

அப்போது சமூக நலத்துறை அமைச்சராக இருந்தபோது டாக்டர் பூங்கோதை அவர்களிடம் இந்த கோரிக்கை மனு தரப்பட்டது. அதற் கான வரைமுறை அரசிடம் இல்லை என்று அதிகாரிகள் சொன்னார்கள். அன்றைக்கு நான் உள்ளாட்சி மற் றும் ஊரகத் துறை அமைச்சராக இருந்தேன். அந்தப் பிரச்சினை என்னுடைய கவனத்திற்கு வந்தது. உடனடியாக பீனோ சபீனுக்காக தனி அரசாணை வெளியிட்டோம். அவர் அமெரிக்கா சென்றுவிட்டு வருவதற்கான மொத்த செலவை யும் அரசு ஏற்றுக்கொண்டது.

அன்றைக்கு முதலமைச்சராக இருந்த கலைஞர்தான் அதற்கான காசோலையை (Cheque) கொடுத் தார். இப்போது நாம் ஆட்சிக்கு வந்த பிறகு என்னை சந்தித்த பீனோ சபீன் அவர்கள் என்னிடம் வாழ்த்து பெற வந்தார்கள். இப்படி சிறியதாக ஒரு support. சிறியதாக ஒரு motiva tion. அதுபோதும். நம்முடைய தமிழ்நாட்டு மாணவர்கள் அடித்து தூள் கிளப்பிவிடமாட்டீர்கள்? இது மாதிரியான தூண்டுதல்கள்தான்,

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 10-08-2023

# யார் தடுத்தது? - 2

வேளாண் சட்டங்கள் மூலமாக இந்திய விவசாயிகளை மொத்தமாக முடக்கி வைக்க நினைத்தது பா.ஜ.க. ஆட்சி.

*** விவசாயிகளின் உற்பத்தி வர்த்தகம் மற்றும் வணிகம் (ஊக்கப்படுத்தல் மற்றும் வசதி செய்தல்) மசோதாவின் மூலம் குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயம் என்ற நடைமுறையே முற்றிலுமாக வழக்கொழிந்து போகும். இந்த மசோதா, விவசாயிகள், இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களைத் தவிர்த்து விட்டு யாருக்கு வேண்டுமானாலும் விற்பனை செய்து கொள்ளலாம் என்று சொல்கிறது. இதன்மூலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடமும் குறைந்தபட்ச ஆதார விலையும் இன்ன பிற வசதிகளும் முற்றிலும் ஒழித்துக்கட்டப்படும்.**

*** விவசாயிகள் (முன்னேற்றம் மற்றும் பாதுகாப்பு) விலை உறுதியின் மீதான ஒப்பந்தம் மற்றும் விவசாய சேவை மசோதாவின்படி, விவசாயம் சார்ந்த தொழில் நிறுவனங்கள் அல்லது மெகா சில்லறை வியாபாரிகள் எனப்படும் கார்ப்பரேட் நிறுவனங்கள் என்ன சொல்கிறதோ அதுதான் விலையாக மாற்றப்படும்.**

*** அத்தியாவசியப் பொருட்கள் (திருத்த) மசோதாவின் படி, பொருட்களைப் பதுக்கி வைத்து தேவையைப் பெருக்கி, அதன் மூலம் விலையைக் கூட்டி அதிக லாபம் பார்க்கலாம். அவசியப் பொருட்களை, அவசியப் பொருட்கள் பட்டியலில் இருந்து நீக்கிவிட்டது. ஸ்டாக் வைக்கும் வரையறையையும் தளர்த்தி விட்டது.**

- இந்த மூன்று சட்டங்களுக்கும் எதிராக இந்திய விவசாயிகள் வீறு கொண்டு எழுந்தார்கள். தலைநகர் டெல்லியையே முடக்கினார்கள். அவர்கள் நடத்திய படையெடுப்பு - இந்த மூன்று சட்டங்களையும் திரும்பப் பெறுகிறோம் என்று சொல்லும் வரைக்கும் தொடர்ந்தது. 'இரும்பு மனிதர்' மோடியை அடிபணிய வைத்தார்கள் இந்திய விவசாயிகள். இத்தகைய போராட்டம் நடத்தாமல் இருந்திருந்தால் மூன்று வேளாண் சட்டங்கள் நடைமுறைக்கு வந்திருக்கும். இருந்த வாய்ப்புகளையும் மொத்தமாக இழந்திருப்பார்கள் விவசாயிகள். விவசாயிகள் வருமானத்தை இரண்டு மடங்கு ஆக்குவேன் என்ற வாக்குறுதி நிறைவேறியதா என்றால் இது வரை இல்லை. **இப்படிச் செய்யவிடாமல் தடுத்தது யார்? எதிர்க்கட்சிகளா?**

**2 கோடி பேருக்கு வேலை:**

**"ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை தருவோம்" என்றார் பிரதமர் மோடி. தரப்பட்டதா? இல்லை.**

இந்தியப் பொருளாதாரத்தை கண்காணிக்கும் மையத்தின் (CMIE) படி, ஆகஸ்ட் 2022 இல் வேலையின்மை விகிதம் 12 மாதங்களில் இல்லாத அளவுக்கு 8.3 சதவீதத்தைத் தொட்டுள்ளது. இளைஞர்களின் வேலையின்மை விகிதம் 42 சதவீதமாக இப்போது உள்ளது. இதுதான் பா.ஜ.க. ஆட்சியின் சாதனையாகும்.

நவம்பர் 8, 2016 அன்று, பிரதமர் மோடி பணமதிப்பிழப்பு நடவடிக்கையை அறிவித்தார். இதன் விளைவாக 50 லட்சம் பேர் வேலையை இழந்தார்கள். காலமுறை தொழிலாளர் கணக்கெடுப்பை PLFSஇன்படி 2017-18 வேலைவாய்ப்பின்மை 45 ஆண்டுகாலம் இல்லாத அளவுக்கு உச்சத்தை தொட்டது. மிக மோசமான ஜி.எஸ்.டி. வரியும் தொழில் வளர்ச்சியை முடக்கி வேலை வாய்ப்பைக் குறைத்தது. அடுத்து வந்தது கொரோனா. நோய் பரவாமல் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடாமல், தடுப்பூசியும் போடாமல் பா.ஜ.க. அரசு இருந்தது. அவர்களுக்குத் தெரிந்த ஒரே தீர்வாக ஊரடங்கு மட்டுமே இருந்தது. இதுவும் பலரது வேலையைக் காலி செய்தது. 2 கோடிப் பேர் வேலையை இழந்தார்கள். வேலை இழப்புகள் அதிகமாக தொடரும் காலமாக மோடி ஆட்சிக் காலம் இருந்தது.

ஒன்றிய பணியாளர் துறை அமைச்சர், கடந்த எட்டு ஆண்டுகளில் 22 கோடி அரசு வேலை விண்ணப்பங்கள் பெறப்பட்டதாகவும், 7.2 லட்சம் பேருக்கு மட்டுமே வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். 2014 முதல் ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை தந்திருந்தால் ஒன்பது ஆண்டு காலத்தில் 18 கோடி பேருக்கு வேலை கிடைத்திருக்க வேண்டும். கிடைத்ததா? என்றால் இல்லை.

**நாட்டில் அதிகமாக பதிவு செய்து, வேலை கிடைக்காமல் இருப்பவர்களின் எண்ணிக்கை 45 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு 2022 ஆம் ஆண்டு உயர்ந்தது. இதுதான் பா.ஜ.க. ஆட்சியின் சாதனையாகும். இதுதான் பா.ஜ.க. ஆட்சியில் வேலை பெறுவோர் நிலைமை ஆகும். அதனால்தான் பிரதமர் மோடி அவர்களின் பிறந்தநாளை 'வேலைவாய்ப்பின்மை தினமாக' கொண்டாடி வருகிறது இளைஞர் காங்கிரஸ். இது பொருத்தமான பெயராகவே அமைந்துள்ளது.**

கடந்த ஆண்டு நவம்பரை விட டிசம்பரில் வேலை வாய்ப்பின்மை அதிகம் ஆனது. நவம்பரில் வேலை வாய்ப்பின்மை விகிதம் 8 விழுக்காடு என்றால் டிசம்பரில் 8.3 விழுக்காடு ஆனது. **இது யார் குற்றம்? எதிர்க்கட்சிகளின் குற்றமா?**

ஒன்பது ஆண்டுகள் அமைதியாக இருந்துவிட்டு, 10 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பை உடனடியாகத் தர வேண்டும் என்று கடந்த ஆண்டு அறிவித்தார் பிரதமர். 18 மாதங்களில் 10 லட்சம் பேருக்கு வேலை என அறிவிக்கப்பட்டது. அதிலும் 70 ஆயிரம் பேருக்குத்தான் வேலை தரப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. ஒன்றிய அரசின் பல்வேறு துறைகளில் 8.72 லட்சம் காலிப்பணியிடங்கள் இருப்பதாக பணியாளர் துறை இணை அமைச்சர் ஜிதேந்தர சிங் கடந்த ஆண்டு சொன்னார். அதனை நிரப்பும் எந்த முயற்சியும் பா.ஜ.க. அரசிடம் இதுவரை இல்லை.

இப்படி தான் சொன்ன -

*** கருப்புப்பணத்தை மீட்பேன், 15 லட்சம் வரை இந்தியர்கள் பெறலாம்.**

*** விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விலையை இரண்டு மடங்கு ஆக்குவேன்.**

*** ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை வாய்ப்பு அளிப்பேன் - ஆகிய மூன்று முக்கியமான இந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு விட்டதா? இல்லை என்றால், அதனை நிறைவேற்ற முடியாமல் தடுத்தது எதிர்க்கட்சிகளா?**

●●

## ஆவின் நிறுவனத்தின் நிருவாக மேம்பாட்டிற்காக

# திருச்சி IIM உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

### அமைச்சர் மனோ தங்கராஜ் முன்னிலையில்

*சென்னை, ஆக. 10 -*

பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் சென்னை, நந்தனம் ஆவின் இல்லத்தில் நேற்று முன் தினம் (8.8.2023) மாலை ஆவின் நிறுவனத் தின் நிருவாக மேம்பாட்டிற்காக திருச்சி IIM உடன் புரிந் துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தெரிவித்ததாவது:

ஆவின் நிறுவனத்தின் வர்த்தகத்தை மேம்படுத்துவதற்காகவும், மனிதவள மேம்பாட்டை உறுதிப்படுத்தவும், ஆலோசனைகள் வழங்குவதற்காகவும், முறையான மேலாண்மை செய்வதற்காகவும் அதன்மூலம் நிறுவனத்திற்கு அதிக பயன் கிடைக்கின்ற விதத்தில் தொழில்நுட்ப மேம்பாட்டை உறுதிப்படுத்தி ஆவின் சேவைகளை மேம்படுத்த திருச்சி IIM உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளோம். நிச்சயமாக இது ஆவின் நிருவாகத்தின் வளர்ச்சிக்கு ஒரு மைல் கல்லாக அமையும்.

ஆவின் நிறுவனம் சிறந்த கட்டமைப்பு உள்ளது அனைத்து பிரிவுகளிலும் உள்ள ஊழியர்களுக்கு அவர்கள் துறை சார்ந்த திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்க இருக்கிறோம். விவசாயிகளுக்கு உடனடி ஒப்புகைச் சீட்டு (Spot Acknowledgement) வழங்கும் முறை மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. ஆவின் நிருவாகத்தை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 6.9% மின் சாரம் சேமிக்கப்பட்டு சுமார் 30 லட்சம் ரூபாய் சேமிக்கப் பட்டுள்ளது. 200க்கும் மேற்பட்ட புதிய சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளது அனைத்து மாவட்டங்களிலும் பால் உப பொருட்களின் தரம் மற்றும் சுவை ஒரே மாதிரியான அளவை கொண்டதாக விரைவில் செயல்படுத்தப்படும்.

இந்நிகழ்வில், பால்வளத் துறை இயக்குநர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் சு.வினீத், டாக்டர் பவன் குமார் சிங், இயக்குனர் IIM திருச்சி, சரவணன், பேராசிரியர் IIM திருச்சி கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (9.8.2023) முகாம் அலுவலகத்தில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் சந்தித்து, திராவிடர் கழகத்தின் சார்பில் தஞ்சாவூரில் அக்டோபர் மாதம் நடைபெறவுள்ள கலைஞர் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அழைப்பு விடுத்தார்.

## சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில்

# தமிழ்நாடு வனம் - வன உயிரினக் குற்றங்கள் கட்டுப்பாட்டுப் பிரிவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்! இலச்சினை வெளியிட்டார்!

சென்னை, ஆக.10-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.08.2023) தலைமைச் செயலகத்தில், சுற்றுச் சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் சார்பில் சென்னை, சைதாப்பேட்டை, பனகல் மாளிகையில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வனம் மற்றும் வன உயிரினக் குற்றங்கள் கட்டுப்பாட்டு பிரிவினைத் திறந்து வைத்து, அதற்கான இலச்சினையை வெளியிட்டார்.

வனத்துறையின் 2021-22ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், மாநில அளவில் திட்டமிடப்பட்ட வன உயிரினக் குற்றங்களைக் கண்டறிந்து தடுக்க வனம் மற்றும் வன உயிரினக் குற்றங்கள் கட்டுப்பாட்டு பிரிவு ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு வனம் மற்றும் வன உயிரின குற்றங்கள் கட்டுப்பாட்டு பிரிவு நிறுவப்பட்டு, முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

திட்டமிட்ட வனம் மற்றும் வன உயிரின குற்றங்களைத் தடுக்கும் வகையில் பிரத்யேகமாக ஏற்படுத்தப் பட்டுள்ள இப்பிரிவு, வன உயிரினக் குற்றங்கள் குறித்த தகவல் மற்றும் நுண்ணறிவு விபரங்களை சேகரம் செய்தல், சட்டவிரோதமாக வன உயிரினங்கள் மற்றும் வன உயிரின பொருட்கள் விற்பனை செய்யப்படுவதைத் தடுத்தல், உலகளாவிய அமைப்புகளுடன் ஒன்றிணைந்து செயல்படுதல் ஆகியவற்றை முக்கிய குறிக்கோள்களாகக் கொண்டு செயல்படுகிறது.

மேலும், வன உயிரினக் குற்றங்கள் தொடர்பான நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை ஏற்படுத்துதல், வனங்களை ஒட்டி வாழும் பகுதிகளில் உள்ள மக்களிடையே தகவல் கட்டமைப்பை மேம்படுத்துதல், வன உயிரினக் குற்றங்கள் சார்ந்த தரவுகளைச் சேகரித்தல் மற்றும் வன உயிரினக் குற்றங்கள் அதிகமாக நிகழ்ந்துள்ள இடங்களை வரைபடமாகத் தயாரித்தல் ஆகியவை இப்பிரிவின் முக்கியச் செயல்பாடுகள் ஆகும்.

இப்பிரிவின் தலைமையகம் சென்னை, சைதாப்பேட்டை, பனகல் மாளிகையில் அமைக்கப்பட்டு, இயக்குநரை தலைவராகவும், சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் இராமநாதபுரம் ஆகிய நான்கு மண்டலங்களில் துணை இயக்குநர்களின் தலைமையிலும் செயல்பட்டு வருகிறது. மேலும், இந்தப் பிரிவில் 118 முன்களப் வனப்பணியாளர்கள் தற்போது பணியாற்றி வருகின்றனர்.

இப்பிரிவின் வாயிலாக 190-க்கும் அதிகமான வன உயிரினக் குற்றங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் யானை தந்தங்கள் மற்றும் யானைத் தந்தத்திலான பொருட்களை விற்பனை செய்தல், புலித்தோல் மற்றும் அதன் பாகங்களை சட்டவிரோதமாக விற்பனை செய்தல் மற்றும் சட்டவிரோதமாக பாம்புகள், கிளிகள், கடல் சங்குகள், கடல் அட்டைகள் ஆகியவை வைத்திருந்த குற்றங்கள் என 50-க்கும் மேற்பட்ட வனக்குற்றங்களில் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு அவர்களிடமிருந்து வன உயிரினப் பொருட்கள் பறிமுதல் செய்து வழக்கு பதிவு செய்யப்பட்டு மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், வனத்துறை அமைச்சர் டாக்டர் மதிவேந்தன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வன பாதுகாவலர் மற்றும் மற்றும் முதன்மை வனஉயிரினக் காப்பாளர் ஸ்ரீனிவாச ஆர் ரெட்டி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (பாதுகாப்பு, விழிப்புணர்வு மற்றும் தமிழ்நாடு வனம் மற்றும் வனஉயிரின குற்றக்கட்டுப்பாடு பிரிவு) ஆகாஷ் தீப் பருவா, (புலிகள் திட்டம்), வன உயிரின குற்றக்கட்டுப் பாட்டு பிரிவு இயக்குநர் திருமதி.இரா.காஞ்சனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழகத்தில் உள்ள அனைத்துப்

# பள்ளிகளுக்கும் வானவில் மன்றத் திட்டம்!

### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தகவல்!

*திருச்சி, ஆக. 10 -*

தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் வானவில் மன்ற திட்டத்தைக் கொண்டு செல்ல வேண்டும் என்று பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசுகையில் குறிப்பிட்டார்.

திருச்சி, காட்டூர் ஆதிதிராவிடர் நல பெண்கள் மேல் நிலைப் பள்ளியில் அமெரிக்கன் இந்தியா பவுண்டேஷன் மற்றும் தமிழக பள்ளிக் கல்வித்துறையின் வானவில் மன்றம் இணைந்து ட்ரோன் சாட்டிலைட் ஏவுதல் குறித்த அறிமுக விழா மற்றும் ஸ்டெம் கண்டுபிடிப்பு கற்றல் மையம் தொடக்க விழா ஆகியவை செவ்வாய்க்கிழமை திருச்சியில் நடைபெற்றது. விழாவுக்கு தலைமை வகித்து, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மேலும் பேசியது: தமிழக முதல்வரால் வானவில் மன்றம் என்ற திட்டம் ரூ. 25 கோடி. மதிப்பில் தொடங்கப்பட்டு, 710 குழுக்களின் மூலம் சுமார் 27 லட்சம் மாணவ, மாணவிகள் பயனடையும் வகையில் கற்பிக்கப்படுகிறது. தொழில் நுட்ப வளர்ச்சிக் கேற்ப மாணவர்கள் தங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

படிப்போடு தனித்திறன்களையும் மாணவ, மாணவிகள் வளர்த்துக் கொள்வது அவசியம். நகர்ப்புற மாணவர்கள் மட்டுமல்லாது. கிராமப்புற அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களையும் சென்னை ஐ.ஐ.டி. போன்ற கல்வி நிறுவனங்களுக்கு கொண்டு வர வேண்டும். தமிழகத்தில் உள்ள 38 ஆயிரம் பள்ளிகளுக்கும் வானவில் மன்ற திட்டத்தைக் கொண்டு செல்ல வேண்டும். அதற்கான விதையைத் தான் தற்போது விதைத்துள்ளோம் என்றார்.

விழாவில் சிறப்பு அழைப்பாளராக இஸ்ரோ முன்னாள் திட்ட இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை பங்கேற்று பேசியது : வானவில் மன்றம் தமிழகம் முழுவதும் சிறப்பாக செயல்படுகிறது. அரசு, ஆசிரியர், மாணவர், பெற்றோர், ஊடகம் இணைந்து செயல்பட்டால் கல்வியில் சிறந்த நிலையை அடையலாம். ஸ்டெம் திட்டம் தமிழகத்தில் 2 மாவட்டங்களில் செயல்படுகிறது.

அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும்போது நாட்டுக்கு மட்டுமல்ல, உலகத்துக்கே நம் அரசுப் பள்ளிகள் பெருமையாக உயர்ந்து நிற்கும். மாணவர்கள் வெற்றி பெறுவதற்கான உயரம் காத்திருக்கிறது. அதனை அடைவதற்கான தகுதியை மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

தொடர்ந்து ட்ரோன், ராக்கெட் உள்ளிட்ட மாணவர்களின்பல்வேறு படைப்புகளை அவர்பார்வையிட்டு கலந்துரையாடி, அலோசனைகளை வழங்கினார். முன்னதாக, ஸ்டெம் கண்டுபிடிப்பு. அதன் கற்றல் மையத்தையும் அவர் திறந்துவைத்தார். விழாவில், வானவில் மன்றம் சார்பில் புராஜெக்டர், மடிக்கணினி (லேப்டாப் உள்ளிட்ட உபகரணங்கள் கோவை, காஞ்சிபுரம். செங்கல்பட்டு உள்ளிட்ட 8 மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களிடம் வழங்கப்பட்டது. மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் எம். சிவக்குமார், அமெரிக்கன் இந்தியா பவுண்டேஷன் டிஜிட்டல் திட்ட தலைமை நிர்வாகி டி.பாஸ்கரன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## சென்னை

### இலக்கிய அணி சார்பில் அறுசுவை உணவு வழங்கல்!

*சென்னை, ஆக. 10 -*

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு சென்னை தென் மேற்கு மாவட்ட இலக்கிய அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் விஜய் வெங்கடேசன் ஏற்பாட்டில் 7.8.2023 அன்று மயிலாப்பூர் லஸ் சந்திப்பு மெயின் ரோட்டில் - முத்தமிழிறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மரியாதை செலுத்தி பின்னர் பொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

மாவட்டச் செயலாளர் - மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமை தாங்கி பொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார். பகுதிச் செயலாளர்கள் எஸ்.முரளி, நந்தனம் கி.மதி, வட்ட செயலாளர் எ.தாஸ், வட்ட பொறுப்பாளர் மா. பா.அன்பு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள், எப்போதும் வென்றான் ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள நியாய விலைக் கடை கட்டடத்தினை திறந்து வைத்தார். உடன் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன், கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி தாக்கரே சுபம் ஞானதேவ் ராவ், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் பெ.ஜெகன், ஒட்டப்பிடாரம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் காசிவிஸ்வநாதன், விளாத்திக்குளம் மத்திய ஒன்றியச் செயலாளர் ராமசுப்பு, மேற்கு ஒன்றியச் செயலாளர் அன்பு ராஜன், விளாத்திக்குளம் பேரூர்க் கழகச் செயலாளர் வேல்சாமி, ஒட்டப்பிடாரம் யூனியன் சேர்மன் ரமேஷ், ஊராட்சி மன்றத் தலைவர் முத்துக்குமார், ஒன்றியக் குழு உறுப்பினர் வெள்ளைச்சாமி ஆகியோர் உடன் உள்ளனர்.

## 9 ஆண்டு கால பா.ஜ.க. அரசு தோல்விகளைத்தான் சந்தித்துள்ளது! மக்களிடம் அளித்த

# வாக்குறுதிகள் எதையும் மோடி அரசு நிறைவேற்றவில்லை!

### பிரதமர் மோடி அரசு மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் நாடாளுமன்றத்தில் மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அடுக்கடுக்கான குற்றச்சாட்டு!

**புதுடெல்லி, ஆக. 10 -**

**மோடி அரசு மீது "இந்தியா" கூட்டணிக் கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நேற்று முன்தினம் (8.8.2023) மக்களவையில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இரண்டு நாட்கள் நடைபெற உள்ள விவாதத்தில் முதல் நாளான நேற்று முன்தினம் தி.மு.க. சார்பில் கழக நாடாளு மன்றக் குழுவின் தலைவர் டி.ஆர்.பாலு கலந்து கொண்டு உரையாற்றினார். ஒன்பது ஆண்டு கால ஒன்றியப் பிரதமர் மோடி தலைமையிலான அரசின் தோல்விகளையும், அவர் தேர்தல் காலங்களில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாததையும் பட்டியலிட்டுக் காட்டியதுடன் தமிழ்நாட்டு திட்டங்கள் எதையும் மோடி அரசு நிறைவேற்றவில்லை என்று டி.ஆர்.பாலு தனது உரையில் கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.**

*அவரது பேச்சின் முழு விவரம் வருமாறு: -*

**அர்ஜூனனைப் போலவே நாங்களும் தீமைகளை அழிப்போம்!**

எனக்கு முன்பு பேசிய பா.ஜ.க. உறுப்பினர் மகாபாரதக் கதையைக் குறிப்பிட்டார். அது புராணக் கதை. இருப்பினும், அந்தக் கதையில் போர்க் களத்தில் கிருஷ்ணன், அர்ஜூனனைப் பார்த்து தயவு தாட்சண்யம் இல்லாமல், எதிரிகளான உறவினர்கள் நண்பர்கள் மேல் கணைகளைத் தொடுக்கச் சொன்னார். அதன்படியே அர்ஜுனனும் செய்தார். அதைப்போலவே நானும் இப்போது எதிர்வரிசையான ஆளும் கட்சியில் உள்ள பழைய நண்பர்கள் என்பதைத் தாண்டி அவர்கள் நாட்டுக்கு இழைத்து வரும் தீங்குகளுக்கு எதிராக தாக்குதல் தொடுக்க போகிறேன்.

ஒரு அரசின் மீதான 'நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில்' பேசுவது மகிழ்ச்சியான ஒன்றல்ல. அதிலும் முழுப் பெரும்பான்மையுடன் உள்ள ஒரு அரசின் மீது, அதுவும் அந்த அரசு தனது இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்து பேசுவது என்பதும் வருத்தம் தரக் கூடியதுதான். இருப்பினும், இன்றைய நிலையில் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரித்தும் அரசை கண்டித்தும் பேசுவது எனது கடமையாகும்.

**மதுரை எய்ம்ஸ் திட்டத்திற்கு நிதி கொடுக்காதது ஏன்?**

சென்ற 2019ஆம் ஆண்டில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும் முன்னர் மதுரையில் ஒன்றிய அரசு சார்பாக எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை அமைக்க பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார். இன்றுவரை அந்த மதுரை எய்ம்ஸ் கட்டி அமைக்கப்படவில்லை. எனக்கு முன்னால் பேசிய பா.ஜ.க. உறுப்பினர் நிஷிகாந்த் துபே அவர்கள் ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள அவரது தொகுதியில் பல்வேறு திட்டங்களை பிரதமர் அளித்துள்ளார் என்று கூறி பெருமைப்பட்டார். ஆனால், பிரதமர் மோடி எங்கள் தமிழ்நாட்டுக்கு எதுவும் செய்யவில்லை என்பதுதான் என் குற்றச்சாட்டு. மதுரை எய்ம்ஸ் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டினாரே தவிர, ஐந்து ஆண்டுகளாக திட்டப் பணிகள் எதுவும் நடைபெறவில்லை. கேட்டால் ஜப்பான் அரசின் நிதி உதவி இன்னும் வந்து சேரவில்லை என்று அரசு தரப்பில் சொல்கிறார்கள். 50 லட்சம் கோடி ரூபாய் கொண்ட ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையான பட்ஜெட்டில் மதுரை எய்ம்ஸ் திட்டத்துக்கு வெறும் 2000 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்ய முடியாதா என்ன?

**கிடப்பில் சேது சமுத்திரத் திட்டம்!**

அதைப்போலவே தமிழ்நாடு மக்களின் 160 ஆண்டு கனவுத் திட்டத்தையும் அலமாரியில் வைத்து கிடப்பில் போட்டு பூட்டி விட்டீர்கள்? ஏன்? இந்தத் திட்டத்தை, அன்றைய பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியாகாந்தி மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் 2005ஆம் ஆண்டில் சிறப்பான விழாவில் மதுரை மாநகரில் துவக்கி வைத்தார்கள் என்பதால்தானா? அந்தக் காரணத்தினால் தான் சங்பரிவாரம் இந்த அரிய திட்டத்தை முடக்கி வைத்துள்ளது. சேது கப்பல் கால்வாய் திட்டம் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு வந்ததை உலகமே பார்த்து வியந்ததே. இன்னும் முப்பது கிலோமீட்டர் தொலைவில்தான் கால்வாய் பணிகள் எஞ்சி இருந்த நிலையில் திடீரென திட்டம் முடக்கப்பட்டது. இன்னும் ஒரு சில மாதங்கள் கூடுதலாக மட்டும் கிடைத்திருந்தால் சேதுசமுத்திரத் திட்டம் நிறைவேறி இருக்கும். ஆனால், நீங்கள் அந்த திட்டப் பணிகளைத் தொடர ஒன்பது ஆண்டுகளில் எதையும் செய்யவில்லை.

### மதுரை எய்ம்ஸ் - சேது சமுத்திரத் திட்டம் உள்ளிட்ட தமிழ்நாட்டுத் திட்டங்கள் அனைத்தும் புறக்கணிப்பு!

அதைப்போலவே, கச்சத்தீவை மீட்டு இந்தியாவுக்கு திரும்பக் கொண்டு வருவது குறித்தும் நீங்கள் எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

**15 லட்சம் ரூபாய் வாக்குறுதி எங்கே? 2 கோடி வேலை எங்கே?**

ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கித் தருவதாக பிரதமர் மோடி அவர்கள் 2014ல் தனது தேர்தல் பரப்புரையில் வாக்குறுதி தந்தார். அதன்படி சென்ற 9 ஆண்டுகால உங்கள் ஆட்சிக்காலத்தில் 18 கோடி பேருக்கு வேலை கிடைத்திருக்க வேண்டுமே. ஆனால், அப்படி நடந்ததா என்ன? மாறாக, மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டத்தில் இருந்து 5 கோடி வேலைவாய்ப்பைப் பறித்துவிட்டீர்கள். ஐக்கிய நாடுகள் சபை மட்டும் அல்லாமல், வெளிநாடுகளில் பயணம் மேற்கொள்ளும்போது பல முறை தமிழ்தான் தொன்மையான மொழி, திருக்குறள் மிகச்சிறந்த நூல் என்று பெருமை பேசிய பிரதமர் மோடி அவர்கள், தமிழ் வளர்ச்சிக்கு என்ன செய்துள்ளார்?



தாராளமாக நிதி ஒதுக்கீடு கிடைத்திட நடவடிக்கை எடுத்தாரா?

**குஜராத்தில் என்ன நடந்தது?**

இன்று பிரதமராக உள்ள திரு.மோடிஜி அன்று குஜராத் மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தபோது என்ன நடந்தது? அகமதாபாத் பற்றி எரிந்தது. 1044 பேர் வன்முறை ,கலவரம், தீவைப்பு சம்பவங்களில் உயிர் இழந்தனர். 2500 பேர் காணாமல் போனார்கள். எண்ணற்ற வீடுகள் தாக்கப்பட்டு அப்பாவி மக்கள் காயமடைந்தனர். அவர்களில் பெரும்பாலோர் சிறுபான்மை சமூகம் சார்ந்த மக்கள்.

இந்தக் கலவரங்கள் பற்றி பல்வேறு நடுநிலை அமைப்புகள் நடத்திய ஆய்வுகள் கண்டறிந்து வெளிக்கொணர்ந்த உண்மைகள் என்ன? இந்தக் கலவரங்கள் மதக் கலவரம் எனவும், குறிப்பிட்ட சமுதாய மக்கள் மீது முன்கூட்டியே திட்டமிட்டு ஏவிவிடப்பட்ட தாக்குதல் எனவும் குற்றம் சாட்டப்பட்டதே. மேலும், அப்போது குஜராத்தின் முதல்வராக இருந்த திரு. மோடி அவர்கள் இந்தக் குற்றச் செயல்களை கண்டுகொள்ள வில்லை என்றும் குற்றம் சாட்டப்பட்டது.

**ராஜ தர்மத்தை மீறக் கூடாது - வாஜ்பாய் அறிவுரை**

இருபது ஆண்டுகள் முன்பு குஜராத்தில் இத்தகைய வன்முறைகள் அரங்கேற்றப்பட்டதைக் கண்டு உலகமே கண்டித்தது. அப்போது பிரதமராக இருந்த திரு.வாஜ்பாய் அவர்கள், குஜராத் கலவரப் பகுதிகளைப் பார்வையிட்ட பின் அன்று முதலமைச்சர் பொறுப்பில் இருந்த உங்களைப் பார்த்து சொன்னது என்ன? புண்ணியமான எல்லைக்கோடாக உள்ள ராஜ தர்மத்தை நீங்கள் மீறக் கூடாது என்றல்லவா அறிவுரை வழங்கினார்.

மாபெரும் தலைவரான மறைந்த பிரதமர் வாஜ்பாய் அவர்கள் அன்று வழங்கிய அறிவுரையை நீங்கள் பின்பற்றவில்லை. மறந்துவிட்டீர்கள். அதனால்தான் இன்று மணிப்பூர் மதக் கலவரத்தில் பற்றி எரிகிறது. பெரும்பான்மை மத மக்கள் சிறுபான்மை மக்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். 140 உயிர்கள் பலியாகிவிட்டன. 65000 பழங்குடி இன மக்கள் வீடுகளை இழந்து உயிர் பாதுகாப்பு தேடி காடுகளிலும், அண்டை மாநிலத்திலும் அகதிகளாக தஞ்சம் அடைந்து தவிக்கின்றனர். கொடுமையான இந்த மத, இனக் கலவரம் மணிப்பூர் மாநிலத்தில் பேயாட்டம் போட்ட நேரத்தில் பிரதமர் வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணம் சென்றுவிட்டார். ஆனால், பாதிக்கப்பட்ட மாநில மக்களைப் போய் பார்க்கவில்லை. ஆறுதல் கூறவில்லை. மணிப்பூர் பா.ஜ.க. அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக, அம்மாநில முதலமைச்சர், வன்முறை கும்பல் இரண்டு இளம் பெண்களை நிர்வாணமாக ஊர்வலமாக நெடுந்தூரம் நடத்திச் சென்று மானபங்கப்படுத்தப்பட்ட கொடுமை குறித்து கேட்ட போது "இது என்ன? இதைப்போல நூறு சம்பவங்கள் நடந்துள்ளன" என்று மனிதாபிமானம் அற்ற வகையில் கூறியுள்ளார். அதுபற்றிக்கூட பிரதமர் கண்டு கொள்ளாதது வேதனைக்குரியது.

**மணிப்பூர் கலவரம்!**

ஒட்டுமொத்த உலகமே மணிப்பூர் வன்முறைக் கொடுமைகளை வன்மையாகக் கண்டித்துள்ளது. ஐரோப்பிய நாடாளுமன்றமும், இங்கிலாந்து நாட்டின் நாடாளுமன்றமும் அங்கே மணிப்பூர் தொடர்பாக நடைபெற்ற விவாதங்களில் பிரதமர் மோடியையும் அவரது கட்சியையும் கடுமையான மொழியில் சாடியுள்ளன. ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தின் 6 எம்.பி.க்கள் குழு தாங்கள் விடுத்துள்ள கோரிக்கையில் "இந்தியாவின் மணிப்பூர் மாநிலத்தில் நிகழ்ந்துள்ள வன்முறை, இனம் மற்றும் மத அடிப்படையில், குறிப்பாக பெரும்பான்மை இந்து மைத்தி சமுதாய மக்களுக்கும், கிறித்தவ குக்கி பழங்குடி மக்களுக்கும் இடையே நடந்துள்ளது. திரும்பத் திரும்ப சுழற்சியாக நடந்த வன்முறைச் சம்பவங்களால் பல தேவாலயங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் அடித்து நொறுக்கப்பட்டன, எண்ணற்ற சொத்துக்கள் அழிக்கப்பட்டன. 100 பேர் உயிரிழந்தனர், 40,000 பேர் வீடுகளை இழந்து இடம் பெயர்ந்துள்ளனர்" என்று சுட்டிக் காட்டியுள்ளனர்.

**நரேந்திர தத்தா ( சுவாமி விவேகானந்தர்) கூறியது என்ன?**

இந்து மதத்தை உலகுக்கு அறிமுகம் செய்த நரேந்திர தத்தா என்ற இயற்பெயர் கொண்ட விவேகானந்தர், அமெரிக்கா நாட்டின் சிகாகோ நகரில் 130 வருடங்கள் முன்னால் நடைபெற்ற உலக மதங்களின் பேரவையில், சகோதரர்களே சகோதரிகளே என்று அவையோரைப் பார்த்து விளித்து உரையாற்றும்போது என்ன கூறினார்? மனித குலத்தின் அனைத்து பிரிவு மக்களையும் ஏற்கும் பண்பும் பொறுமையும் நிறைந்த நாட்டில் இருந்து வருகிறேன் என்றல்லவா குறிப்பிட்டார்! "எங்கள் நாடு உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பல்வேறு மத நம்பிக்கை கொண்டவர்கள் துன்புறுத்தலுக்கு ஆளாகி வந்த அனைவருக்கும் புகலிடம் தந்து ஏற்றுக் கொண்ட பெருமைக்கு உரியது. அது மட்டுமல்ல. அனைத்து மதங்களும் உண்மையானவை என்பதையும் உணர்ந்து ஏற்றுள்ள நாடு எங்கள் நாடு. மதப் பாகுபாடும், முரட்டு நம்பிக்கையும் இவற்றின் வழித்தோன்றலான மத வெறியும் எளிய மக்களை மீண்டும் மீண்டும் ரத்தம் சிந்த வைத்து இந்த அழகிய உலகின் பல்வேறு பகுதிகளை மனிதகுலம் சிந்திய குருதி வெள்ளத்தால் நனைத்துள்ளது. இந்தக் கொடுமை ஒழிய வேண்டும்" என்று எச்சரிக்கை விடுத்து சென்றுள்ளார் விவேகானந்தர் என்று அறியப்பட்ட நரேந்திர தத்தா. விவேகானந்தர் எது நடக்கக் கூடாது என்று அறிவுறுத்தினாரோ, அச்சப்பட்டாரோ அந்தக் கொடுமை இப்போது மணிப்பூரிலும், அரியானாவிலும், முன்பு குஜராத்திலும் நரேந்திர மோடி புகழ் இந்துத்துவ ஆட்சியில் நடைபெற்றுள்ளது.

**தமிழ்நாடு கவர்னரைத் திரும்பப் பெறுக**

தமிழ்நாட்டில் ஒருவர் இருக்கிறார். அவர் யாரென நான் பெயர் குறிப்பிட்டுச் சொல்லாவிட்டாலும் அனைவருக்கும் தெரியும். அவர் தமிழ்நாடு சட்டப்பேரவையில் இருந்து, முதலமைச்சர், அமைச்சர்கள் ஏனைய கட்சிகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் அனைவரும் அமர்ந்து இருக்கும்போதே தேசியகீதம் இசைக்கப்படும் முன்பே அவையைவிட்டு வெளியேறினார்.

> *ஒரு அரசின் மீதான 'நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில்' பேசுவது மகிழ்ச்சியான ஒன்றல்ல. அதிலும் முழுப் பெரும்பான்மையுடன் உள்ள ஒரு அரசின் மீது, அதுவும் அந்த அரசு தனது இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்து பேசுவது என்பதும் வருத்தம் தரக் கூடியது தான். இருப்பினும், இன்றைய நிலையில் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை ஆதரித்தும் அரசை கண்டித்தும் பேசுவது எனது கடமையாகும்.*

தேசியகீதத்துக்கு ஆளுநர் தரும் மரியாதை இதுதானா? இப்படிப்பட்ட ஆளுநரின் செயல்களை உள்துறை அமைச்சர் கண்டிப்பதுடன் அவரை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

**நம்பிக்கை இல்லாத் தீர்மானத்துக்கு தி.மு.க. ஆதரவு**

எனவே, இத்தகைய சூழலில் இந்த அரசு மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டபடியால், அரசுக்கு எதிரான நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கிறது.

எனது உரையை நிறைவு செய்யும் முன்னர் ஒரு திருக்குறளை, அதாவது குறள் எண்.474ஐ குறிப்பிட விரும்புகிறேன்.

"அமைந்தாங்கு ஒழுகான் அளவறியான் தன்னை

வியந்தான் விரைந்து கெடும்"

இவ்வாறு கழகப் பொருளாளரும். திருப்பெரும்புதூர் மக்களவை உறுப்பினரும் தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவருமான டி. ஆர்.பாலு மக்களவையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்று உரையாற்றினார்.




சென்னை, எழும்பூர் மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி மைதானத்தில் ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை சென்னை 2023 போட்டியையொட்டி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், இந்திய அணித்தலைவர் ஹர்மன்பிரீத் சிங், சீனா அணித்தலைவர் சாங்லியாங் லின், கொரியா அணித்தலைவர் லீ நாம் யங், பாகிஸ்தான் அணித்தலைவர் உமர் பூட்டா, ஜப்பான் அணித்தலைவர் மசாகி ஒசாவி, மலேசியா அணித்தலைவர் மார்கன் ஜலில் ஆகியோர் தமிழ்நாட்டின் பாரம்பரிய வேட்டி, சட்டையில் பரிசுக் கோப்பையுடன் நேற்று முன்தினம் (8.8.2023) புகைப்படம் எடுத்துக்கொண்டார்கள்.

---

தமிழ் அகராதியியல் நாள் விழா - 2023!

## அகராதி ஆய்வு மலருக்குக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன!

*சென்னை, ஆக. 10 -*

*'தமிழ் அகராதியியலின் தந்தை' என்று போற்றப்படும் வீரமாமுனிவரின் தமிழ்த் தொண்டைப் போற்றும் வகையில், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் மூலம் ஆண்டுதோறும் நவம்பர் 8ஆம் நாள் 'தமிழ் அகராதியியல் நாளாகக்' கொண்டாடப்படுவதோடு, நவம்பர் 08 ஆம் நாளில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பட்டுவருகிறது.*

*நடப்பு 2023-2024ஆம் ஆண்டிற்கான பன்னாட்டுக் கருத்தரங்கத்தில் பங்கேற்க ஆர்வமுள்ள தமிழார்வலர்கள், தமிழறிஞர்கள், ஆய்வாளர்கள், பேராசிரியர்கள் உட்பட அனைவரும் பின்வரும் பொருண்மைகளில் 5 பக்க அளவில் ஆய்வுக் கட்டுரைகளை இவ்வியக்ககத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*பன்னாட்டுக் கருத்தரங்கத்திற்கு வழங்கப்படும் ஆய்வுக் கட்டுரைகளில் தேர்வுக்குழுவால் தெரிவு செய்யப்படும் கட்டுரைகள் மட்டுமே 'தமிழ் அகராதியியல் நாள்' சிறப்பு ஆய்வு மலரில் இடம் பெறும்.*

**தலைப்புகள்:**

*1. மின்னகராதி காலத்தின் தேவை 2. கலைச்சொல்லாக்கமும் ஊடகத்துறையும் 3. குமுக வலைத்தளங்களில் கலைச்சொல் பயன்பாடு 4. கலைச்சொல்லாக்கமும் மொழிவளர்ச்சியும் 5. கணினித் தமிழ் வளர்ச்சியில் சிக்கல்களும் தீர்வுகளும் 6. தமிழ்ப் பத்தி இலக்கியங்களில் காணப்படும் கலைச்சொற்கள் 7. ஓலைச்சுவடிகளில் காணப்படும் அருந்தமிழ்ச்சொற்கள் 8. கலைச்சொல்லாக்கமும் திரைத்துறையும் 9. தமிழில் மொழிக் கலப்பைக் கலைதல் 10. வட்டார வழக்கில் சொல்லாக்கம் 11. தமிழ் அகராதியியலின் தோற்றமும் வளர்ச்சியும் 12. அகராதி வளர்ச்சியில் மேலைநாட்டினரின் பங்கு உள்ளிட்ட தலைப்புகளில் கட்டுரைகளை ஏ4 அளவில் ஐந்து பக்கங்களுக்கு மிகாமல் மருதம் ஒருங்குறி (யுனிகோடு) எழுத்துருவில், எழுத்தளவு 11 புள்ளி, வரி இடைவெளி 1.5இல், சொற்செயலிக்கோப்பாக (Word Document file) agarathimalar2020@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கும், "இயக்குநர், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்ககம், நகர் நிருவாக அலுவலக வளாகம், முதல் தளம், எண். 75, சாந்தோம் நெடுஞ்சாலை, மே.ரா.செ. நகர், சென்னை - 600 028" என்ற இயக்கக முகவரிக்கும் 15.09.2023 ஆம் நாள் மாலை 5.00 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பிவைக்க வேண்டும்.*

*கட்டுரையாளர்கள் கட்டுரையுடன் முகவரி, கைப்பேசி எண், மின்னஞ்சல் முகவரி, கடவுச்சீட்டு அளவிலான (Passport size Photo) ஒளிப்படம், ஒரு பக்க அளவில் தன்விளக்கக் குறிப்பு ஆகியவற்றையும் கட்டாயம் இணைத்து அனுப்ப வேண்டும். மேலும், அனுப்பப்படும் ஆய்வுக் கட்டுரை இதற்கு முன் வேறு எந்த இதழ்களுக்கும் வழங்கப் பெறவில்லை என்ற உறுதி மொழியையும் தன்னொப்பமிட்டு (self attested) அனுப்ப வேண்டும். கட்டுரைகள் அடிக்குறிப்புகள் மற்றும் துணைநூற்பட்டியலுடன் அமைதல் வேண்டும்.*



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.8.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மூலம் முதல் முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்பவர்களுக்கு ஹஜ் மானியமாக 3987 பயனாளிகளுக்கு தலா ரூ.25,070/ வீதம் மானியத் தொகை வழங்கிடும் அடையாளமாக, 5 பயனாளிகளுக்கு ஹஜ் மானியத் தொகைக்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் செயலாளர் மற்றும் செயல் அலுவலர் முகம்மது நசிமுத்தின், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், சிறுபான்மை நல இயக்குநர் திருமதி மு. ஆசியா மரியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# 38 மாவட்டங்களிலும் மாதிரிப் பள்ளிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

★ நான் முதல்வன்
★ இல்லம் தேடி கல்வி
★ புதுமைப் பெண்
★ அனைவர்க்கும் ஐஜடி போன்ற திட்டங்கள்.

**தரத்தில் அனைத்து கல்வி நிறுவனங்களும் ஒரே அளவு கோலோடுஇயங்க வேண்டும்!**

அரசு பள்ளி தனியார் பள்ளிகளும், அரசு கல்லூரி - தனியார் கல்லூரிகளும், நிர்வாக அமைப்பில் வேறுபாடு கொண்டதாக இருக்கலாம். ஆனால் தரத்தில் அனைத்து கல்வி நிறுவனங்களும் ஒரே அளவுகோலோடுதான் இயங்கவேண்டும். இந்த நிறுவனங்கள் எல்லோருக்கும் பொதுவான நிறுவனங்களாக இருக்கவேண்டும். அப்படிப்பட்ட சமச்சீர் நிலையைதான் உருவாக்கி வருகிறோம். நாட்டினுடைய முதன்மைக் கல்வி நிறுவனங்களில் இதுவரைக்கும் நம்முடைய அரசுப் பள்ளி மாணவர்கள் மிகக் குறைவான அளவில்தான் உயர்கல்விக்காகப் போயிருக்கிறார்கள். இந்த நிலை மாறவேண்டும். எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கவேண்டும்.

கல்வியிலேயும் இதுதான் நம்முடைய திராவிட மாடல் அரசினுடைய நிலைப்பாடு. அதிலும், உயர்கல்விக்குப் போகின்ற மாணவர்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம். இதற்காக கொண்டுவரப்பட்டது தான், ‘அனை வருக்கும் ஐ.ஐ.டி’ திட்டம்!

> **ந**ம்முடைய குழந்தைங்களுக்கு நாட்டினுடைய உயர்கல்வி நிறுவனங்கள் எவை? அதில் நுழைய எப்படி விண்ணப்பிக்க வேண்டும்? போட்டித் தேர்வுகளுக்கு படிக்கும் முறை என்ன? இப்படி பல தகவல்கள் சென்று சேராமல் இருந்தது. இப்போது அந்தப் பாதைய உருவாக்கி இருக்கோம். அதுனால, இன்னைக்கு 225 மாணவர்கள் நாட்டின் முதன்மை கல்வி நிறுவனங்களுக்கு இந்த ஆண்டு போகப்போறாங்க. பள்ளிக் கல்வித் துறையோட கடுமையான முயற்சிகளாலதான் இது சாத்தியமாச்சு!

**கிராமப்புற மாணவர்கள் மேல் படிப்புக்கு புதிய பாதையை உருவாக்கி இருக்கிறோம்!**

தமிழ்நாட்டினுடைய எங்கேயோ ஒரு கிராமத்தில் இருக்கின்ற ஒரு அரசுப் பள்ளியில் படித்த ஒரு மாணவரால், ஏன் இதுவரைக்கும் I.I.T, N.L.U, நிஃப்ட் போன்ற நாட்டினுடைய முதன்மையான உயர்கல்வி நிறுவனங்களுக்குப் போக முடியாமல் இருந்தது என்றால், அதற்கு என்று தனியாக சமூகப் பொருளாதாரக் காரணங்கள் இருக்கிறது.

நம்முடைய குழந்தைங்களுக்கு நாட்டினுடைய உயர்கல்வி நிறுவ னங்கள் எவை? அதில் நுழைய எப்படி விண்ணப்பிக்க வேண்டும்? போட்டித் தேர்வுகளுக்கு படிக்கும் முறை என்ன? இப்படி பல தகவல்கள் சென்று சேராமல் இருந்தது. இப்போது அந்தப் பாதைய உருவாக்கி இருக்கோம். அதுனால, இன்னைக்கு 225 மாணவர்கள் நாட்டின் முதன்மை கல்வி நிறுவனங்களுக்கு இந்த ஆண்டு போகப்போறாங்க. பள்ளிக் கல்வித் துறையோட கடுமையான முயற்சிகளாலதான் இது சாத்தியமாச்சு!

**அமைச்சர் மகேஷ் பொய்யாமொழியின் பணி தலைமுறை தலைமுறைக்கும் பயனளிக்கும்!**

இங்கே இருக்கின்ற பள்ளி மாணவர்களான உங்களை மாதிரியே உங்கள் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியும் ரொம்ப எனர்ஜெட்டியா இருக்கிறார். அவரை குழந்தையாக இருக்கின்ற காலத்திலிருந்து நான் பார்த்துக் கொண்டு வருகிறேன். என் கண் முன்னாடி வளர்ந்த பையன், இன்றைக்கு அமைச்சர் என்று நான் சொல்லுகின்ற அளவுக்கு வளர்ந்திருக்கிறார்.

இந்தப் பள்ளிக் கல்வித் துறையில் அவர் செஞ்சிட்டு வர்ற பணிகள் தலைமுறை தலைமுறைக்கும் பயனுள்ள பணிகளாக அமைந்திருப்பது நாம் கண்கூடாக பார்க்கிறோம்.

இந்த சாதனையை பற்றி கொஞ்சம் விரிவாக புள்ளிவிவரங்களுடன் சொல்லவேண்டும் என்றால், கடந்த ஆண்டு முதன்மை கல்வி நிறுவனங்களுக்குச் சென்று அரசுப் பள்ளி மாணவர்களோட எண்ணிக்கை 75. இந்த ஆண்டு 225. இது மிகப்பெரிய சாதனை!

அரசுப் பள்ளி மாணவர்களில் கடந்த ஆண்டு ஐ.ஐ.டி.க்கு போனவர் ஒரே ஒருத்தர்தான். ஆனால் இந்த ஆண்டு, 6 பேர் செல்கிறார்கள்.

**அரசுப் பள்ளி மாணவர்களின் இந்தாண்டு சாதனைகள் !**

கடந்த ஆண்டு தேசிய தொழில்நுட்ப கழகம், இந்திய தகவல் தொழில்நுட்ப கழகங்கள், தேசிய உணவு தொழில் நுட்பம், தொழில் முனைவு மற்றும் மேலாண்மை நிறுவனம் ஆகியவற்றிற்கு சென்றவர்கள் 13 பேர். இந்த ஆண்டு 55 பேர் செல்கிறார்கள்.

National Forensics Science Universityக்கு கடந்த கல்வியாண்டில் சென்றவர்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா?

ஜீரோ! ஆனால் இந்த ஆண்டு 6 பேர் தேர்வாகி இருக்கிறார்கள்.

முழு ஸ்காலர்ஷிப்புடன் தைவான் ஸ்டேட் யுனிவர்சிட்டியில் படிப்பதற்கு இரண்டு அரசுப் பள்ளி மாணவர்கள் தேர்வாகி இருக்கிறார்கள்.

Indian Maritime Universityல் கடந்த ஆண்டு ஒருவரும் போகாத நிலையில் இந்த ஆண்டு 6 மாணவர்கள் செல்லயிருக்கிறார்கள்.

National Law Universityக்கு கடந்த ஆண்டு 4 பேர். இந்த ஆண்டு 9 பேர்.

School of Excellence in Lawவுக்கு கடந்த ஆண்டு ஒருத்தர்தான்; இந்த ஆண்டு 7 பேர்.

National Institute of Fashion Technologyல் இந்த ஆண்டு 27 பேர் படிக்கப் போகிறார்கள். கடந்த ஆண்டு யாரும் போகவில்லை!

கடந்த ஆண்டு மத்தியப் பல்கலைக்கழகங்களுக்கு 6 பேர் படிக்கப் போனார்கள்; இந்தக் கல்வியாண்டில் 20 பேர் செல்கிறார்கள்.

School of Architectureக்குத்தான் இந்த ஆண்டு அதிகம் பேர் படிக்கப் போகிறார்கள். கடந்த ஆண்டு ஒரே ஒரு மாணவர்தான் அங்கே சென்றார். ஆனால் இந்த ஆண்டு 69 பேர் போகப் போகிறார்கள்.

Indian Institutes of Science Education and Researchக்கு கடந்த ஆண்டு ஒருவரும் போகாத நிலையில், இந்த ஆண்டு அந்த நிலை மாறி, 10 அரசுப் பள்ளி மாணவர்கள் போகிறார்கள்.

**நாட்டின் முதன்மைக் கல்வி நிறுவனங்களுக்கு 225 பேர் படிக்கச் செல்வது நமக்கு பெருமை!**

இப்படி, மொத்தம் 225 அரசுப் பள்ளி மாணவர்கள் நாட்டின் முதன்மைக் கல்வி நிறுவனங்களுக்கு தமிழ்நாட்டிலிருந்து படிக்கப் போகிறீர்கள் என்பது நாம் எல்லோரும் பெருமைப்பட வேண்டிய விஷயம் இது!

தனியார் பள்ளி மாணவர்களால் மட்டும்தான் இப்படிப்பட்ட நிறுவனங்களுக்கு போக முடியும் என்ற எண்ணத்தை உடைத்து, இன்றைக்கு நம்முடைய அரசுப் பள்ளி மாணவர்களும் போக முடியும் என்ற சாதனையை நீங்கள் படைத்திருக்கிறீர்கள். இது மூலமாக அரசுப் பள்ளியுடைய கல்வித் தரம் உயர்ந்திருக்கிறது என்ற உண்மை உலகுக்குத் தெரிய வந்திருக்கிறது. எல்லாத்தையும்விட மிக முக்கியமாக நான் நினைப்பது என்னவென்றால், உயர் கல்வி நிறுவனங் களுக்குள்ள நம்முடைய அரசுப் பள்ளி மாணவர்களான நீங்களும் நுழை யும்போதுதான் சமூக நீதி முழுமை யடைகின்றது.

2022-23ஆம் கல்வியாண்டில் தமிழ்நாட்டில் 25 மாவட்டங்களில், 25 மாதிரிப் பள்ளிகள் தொடங்கப்பட்டது. இவையெல்லாம் உண்டு உறைவிடப் பள்ளிகளாக செயல்பட்டு வருகிறது. இதிலிருந்து முதன்மைக்கல்வி நிறுவனங்களுக்குப் செல்வதற்கு விருப்பம் இருக்கும் மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி கொடுத்தோம்.

இந்தக் கல்வியாண்டில், மேலும் 13 பள்ளிகள் தொடங்கப்பட்டு இன்றைக்கு 38 மாவட்டங்களிலும், மாதிரிப் பள்ளிகள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அதனுடைய விளைவுதான் இன்றைக்கு இத்தனை மாணவர்கள் முதன்மை கல்விநிறுவனங்களில் படிக்கப் செல்கிறார்கள்.

மாதிரிப் பள்ளிகளினுடைய மாணவர்கள் இந்த நிலையை அடைவதற்கு கடுமையாக உழைத்த ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்.

மாணவர்களுடைய படிப்பதற்கான செலவை அரசே ஏற்றுக் கொண்டிருக்கிறது. படிப்ப முடிச்சிட்டு நீங்க வெளிய வரும்போது உங்களோட உலகம் ரொம்ப பெரியதாக இருக்கும். ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம் மலர வேண்டும் என்றால் எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கின்ற மாதிரி இருக்க வேண்டும்.

இந்த உயர்கல்வி மூலமா உங்க எல்லாருக்கும் அது சாத்தியப்பட்டிருக்கு. நீங்கள் இப்போது படிக்கப் போகின்ற கல்வி நிறுவனத்துக்கு அடுத்தடுத்த ஆண்டுகளில் சேரக்கூடிய அரசுப் பள்ளி மாணவர்களுக்கு நீங்கள்தான் வழி காட்டணும்.

**கல்வி நிறுவன அலுவலர்கள் மாணவர்களுக்கு நல்வழி காட்டுவார்கள்!**

மேடையில இருக்கின்ற, IIT, NIT, NLU நிறுவனங்களுடைய பொறுப்பான பதவியில் இருக்கின்ற அலுவலர்களிடம், நான் கேட்டுக் கொள்வதெல்லாம், “எங்கள் பிள்ளைகள் உங்களிடம் வருகிறார்கள். அவர்களை அரவணைத்துக் கொள்ளுங்கள். அவர்களுக்கு வழிகாட்டுங்கள்” என்பதுதான்.

மாணவர்களிடம் நான் பேசும்போதெல்லாம் சொல்கிறதுதான், மறுபடியும் இங்கேயும் சொல்ல விரும்புறேன். அரசு ஏற்படுத்தித் தருகின்ற வாய்ப்புகள் பயன்படுத்திக் கொள்ளுங்கள். படிங்க! படிங்க! படிங்க! இதுதான் என்னோட வேண்டுகோள்.

படிக்கின்ற காலத்தில் கவனச்சிதறல்கள் இருக்கக்கூடாது. உங்களை இந்த ளவுக்கு வளர்த்துவிட்ட உங்களுடைய பெற்றோர்கள் - ஆசிரியர்களை மனதில் வைத்து செயல்படுங்கள். இன்னும் பல உயரங்கள் உங்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறது.

ஒளிமயமான எதிர்காலம் உங்களை நோக்கி வந்துகொண்டிருக்கிறது. அனைவருக்கும் என்னுடைய அன்பான வாழ்த்துகள்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## ராகுல் காந்தி உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

உண்மையான இந்திய மக்களை பார்த்தேன். மக்கள், எனக்கு ஏராளமான உதவிகளை செய்தனர். அவர்களின் ஆதரவும் கிடைத்தது. ஏழைகளின் வேதனைகளையும் உணர்ந்தேன். அனைத்துத் தரப்பு மக்களும் எனது பயணத்தில் இணைந்தனர்.

**இந்தியாவில் தற்போது விவசாயிகளின் நிலை மிக மோசம்!**

விவசாயிகளின் பிரச்சினைகளை கேட்டறிந்தேன். விவசாயிகளின் இதயத்தில் இருந்த வலி என் இதயத்துக்கு இடம் மாறியது. இந்தப் பயணம் எனது வாழ்க்கையை மாற்றியது. நாட்டு மக்களின் குரலை கேட்கும் போது மனதில் உள்ள வெறுப்புகள், ஆசைகள் விலகிச் செல்லும். இந்தியாவில் விவசாயிகளின் நிலை மோசமாக இருந்ததைக் கண்டேன்.

மணிப்பூருக்கு நான் சென்று வந்தேன். இந்நாள் வரை பிரதமர் மணிப்பூர் மாநிலத்திற்குச் செல்லவில்லை. மணிப்பூர் இந்தியாவில் இல்லையா? நாட்டின் ஒரு பகுதியாக கருதாததால் தான் பிரதமர் அங்கு செல்லவில்லை. அம்மாநில மக்களை பிரதமர் கைவிட்டு விட்டார். மணிப்பூரில் நிவாரண முகாம்களில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளிடம் பேசினேன். தன் கண் முன்னே தன் ஒரே மகன் மீது துப்பாக்கி குண்டு பாய்ந்தது என்று பெண் ஒருவர் என்னிடம் சொன்னார். மகனை இழந்தபெண்உடைமைகளைவிட்டு விட்டு அங்கிருந்து வெளியேறினார்.

மற்றொரு முகாமில் உங்களுக்கு என்ன நடந்தது என்று ஒரு பெண்ணைப்பார்த்துநான்கேட்டதும் அவர் மயக்கம் அடைந்தார். நினைத்துப்பார்க்கவேபயங்கரமான சம்பவங்கள்நடந்துள்ளதாகநிவாரண முகாமில் உள்ள பெண்கள் தெரிவித்தனர்.

இந்தியா என்ற சித்தாந்தத்தையே அரசு கொன்றிருப்பது மணிப்பூர் சம்பவம்மூலம்நிரூபணமாகியுள்ளது. மணிப்பூரில் நடக்கும் சம்பவம் ஒட்டுமொத்த நாட்டின் மீதான கொலை.

**மணிப்பூரில் இந்தியாவை கொலை செய்தீர்கள்!**

பா.ஜ.க.வின் அரசியலில், மணிப்பூரில் நமது நாடு கொலை செய்யப்பட்டுவிட்டது. மணிப்பூரில் இந்தியாவை கொலை செய்தீர்கள்.

மணிப்பூரில் மக்களை கொன்றதால் இந்திய தாய் கொலை செய்யப்பட்டார்.நீங்கள்தேசபக்தர்கள் அல்ல. தேச துரோகிகள். மணிப்பூர் குரலை நசுக்கிவிட்டீர்கள்.

என் ஒரு தாய் இங்கே அமர்ந்திருக்கிறார். மற்றொருதாயை மணிப்பூரில் கொன்றிருக்கிறீர்கள். நீங்கள் பாதுகாவலர்கள் அல்ல. மணிப்பூர் கலவரத்தை இந்திய ராணுவத்தால் ஒரே நாளில் கட்டுப்படுத்த முடியும். ஆனால், அதனை நீங்கள் செய்யவில்லை.

**அரசின் அலட்சியத்தால் மணிப்பூர் – அரியானா எரிகிறது!**

மோடி தலைமையிலான அரசின் அலட்சியத்தால்மணிப்பூர்,அரியானா போன்ற மாநிலங்கள் எரிந்து கொண்டிருக்கின்றன.

இவ்வாறு ராகுல்காந்தி உரையாற்றினார்.

**பா.ஜ.க. கடும் இடையூறு!**

நம்பிக்கையில்லாத்தீர்மானத்தின் மீது ராகுல் காந்தி உரையாற்றிய போது, பா.ஜ.க. உறுப்பினர்கள் தொடர்ந்து இடையூறு செய்யும் வகையில் தொடர் அமளியில் ஈடுபட்டனர்.மக்களவைத்தலைவரின் வேண்டுகோளை மதிக்காமல் பா.ஜ.க.வினர் முழக்கமிட்டுக் கொண்டே இருந்தனர்.

ஜெயின் வெஸ்ட் பில்டர்ஸ் நிறுவனத்தால் சாலிகிராமத்தில் கட்டப்பட்ட

# கட்டிடத்தின் பாதுகாப்பு குறித்த ஆய்வுக்கூட்டம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது!

*சென்னை, ஆக.10-*

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தலைமையில், நேற்று முன்தினம் 08.08.2023), திருவாளர்கள் ஜெயின் வெஸ்ட் பில்டர்ஸ் நிறுவனத்தால், கதவு எண். 24, அருணாச்சலம் சாலை, சாலிகிராமம் , சென்னை - 600 093 முகவரியில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் தற்போது ஏற்பட்டுள்ள கட்டிடத்தின் பாதுகாப்பு குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வளாக கட்டிடம் 5 தொகுப்புகளுடன் கூடிய அடுக்குமாடி கட்டிடம் கட்டுவதற்கு 17.05.2011 அன்று சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் திட்ட அனுமதி வழங்கியுள்ளது. மேலும், இக்கட்டிடத்திற்கு 20.10.2015 அன்று பணிநிறைவுச் சான்றிதழும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் வழங்கியுள்ளது.

தற்போது இவ்வளாகத்தில் குடியிருப்புகளை வாங்கியுள்ள குடியிருப்பு உரிமைதாரர்கள் மேற்படி இக்கட்டிடத்தினை திருவாளர்கள் ஜெயின் வெஸ்ட் பில்டர்ஸ் நிறுவனம் சரியாகக்கட்டி தங்களுக்கு ஒப்படைக்கவில்லை என்ற கோரிக்கையின் பேரில் ஊடகத்தில் வெளிவந்த தகவல்களின் அடிப்படையில், இந்த ஆய்வு செய்யப்பட்டது.

இக்கட்டிடத்தின் சம்பந்தமான வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண். WP No. 12880 of 2022 நடைபெற்று வருகிறது. இவ்வழக்கில் நீதிமன்றம் இக்கட்டிடத்தின் கட்டுமான நிறுவனரை சென்னை ஐ.ஐ.டி.யில் ரூபாய் இரண்டு கோடி செலுத்தி ஆய்வறிக்கையினை பெறுமாறு உத்தரவிட்டது. இதனை எதிர்த்து கட்டுமான நிறுவனர் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அவ்வழக்கு கடந்த 13.02.2023 அன்று இவ்வழக்கினை உயர்நீதிமன்றத்திலேயே தீர்த்துக்கொள்ளுமாறு ஆணை பிறப்பித்தது. ஆனால் கட்டிட மேம்பாட்டாளர் M/s. Jain Housing இதுநாள் வரை இது தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இவ்வளாகத்தின் குடியிருப்பில் வசிப்பவர்கள் மற்றும் பொதுமக்களின் நலனைக் கருதி அமைச்சர் அவர்கள் M/s. CUBE நிறுவனம் மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் ஆகிய நிறுவனங்களிடம் முழுவதுமாக தொழில்நுட்ப ஆய்வு செய்து இக்கட்டிடத்தின் தற்போதைய நிலைக்கான காரணம் மற்றும் கட்டிடத்தின் உறுதித்தன்மையின் தொழில்நுட்ப ஆய்வறிக்கையினை விரைவில் பெற்று மக்களின் நலனைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கும்படி அறிவுறுத்தியுள்ளார்.

வெடிமருந்து தொழிற்சாலை விபத்தில்

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் கூறினர்!

*புதுக்கோட்டை ஆக.10-*

புதுக்கோட்டை மாவட்டம், வெள்ளனூர் வட்டம், பூங்குடி கிராமத்தில் இயங்கி வந்த வெடிமருந்து தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தில் காயமடைந்து, புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் வைரமணி மற்றும் குமார் ஆகியோரை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி 08.08.2023 அன்று நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். அதனைத்தொடர்ந்து, வெடிமருந்து தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தில் காயமடைந்து சிகிச்சை பலனின்றி உயிரிழந்த கோவில்பட்டியைச் சேர்ந்த வீரமுத்து, திருமலை ஆகியோர்களின் வாரிசுதாரர்களிடம் அமைச்சர் எஸ்.ரகுபதி நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

இந்நிகழ்வுகளில், மாவட்ட ஆட்சித்தலைவர் தஜ.சா.மெர்சி ரம்யா உடனிருந்தார்.

புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்களிடம் எஸ்.ரகுபதி ஆறுதல் கூறி, அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். மேலும் அவர்களுக்கு உயர்தரத்திலான சிகிச்சையினை மேற்கொள்ளவும் மருத்துவர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.வை.முத்துராஜா, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் த.ஜெயலட்சுமி, நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், அரசு மருத்தவக்கல்லூரி முதல்வர் (பொ) மருத்துவர் ராஜ்மோகன், வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், ஆசெந்தில் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## ‘வாட்ஸ் அப்’பில் வந்த செய்தி!



Agra Court stays BJP MP Ram Shankar Katheria conviction

August 07, 2023 10:53 pm | Updated 10:53 pm IST - Lucknow

The court order will help Mr. Katheria evade disqualification from Parliament

THE HINDU BUREAU

பா.ஜ.க. எம்.பி. ராம்சங்கர் கத்தேரியா மீதான தண்டனைக்கு ஆக்ரா நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

நீதிமன்ற உத்தரவு, கத்தேரியா நாடாளுமன்றத்தில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவதைத் தவிர்க்க உதவும்.

## தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மூலம் முதல் முறையாக

# ஹஜ் செல்லும் 3987 பயனாளிகளுக்கு தலா ரூ.25,070 நிதி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஆக. 10 - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.8.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மூலம் முதல் முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்பவர்களுக்கு ஹஜ் மானியமாக 3987 பயனாளிகளுக்கு தலா ரூ.25,070/ வீதம் மானியத் தொகை வழங்கிடும் அடையாளமாக, 5 பயனாளிகளுக்கு ஹஜ் மானியத் தொகைக்கான காசோலைகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியின் பலனாக, இந்த ஆண்டு ஹஜ் பயணத்திற்கு சென்னை புறப்பாட்டுத் தளமாக அறிவிக்கப்பட்டு, தமிழ்நாட்டு பயணிகள் சென்னையிலிருந்து ஹஜ் பயணம் மேற்கொண்டு, தங்கள் ஹஜ் கடமையை நிறைவேற்றி தாயகம் திரும்பியுள்ளனர். தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மூலம் முதன்முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்பவர்களுக்கு அரசு ஹஜ் மானியம் வழங்கி வருகிறது. அதற்காக இந்த ஆண்டு தமிழ்நாடு அரசால் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தகுதியுள்ள பயணி ஒருவருக்கு ரூ.25,070/வீதம் 3,987 பயனாளிகளுக்கு இம்மானியத் தொகை வழங்கப்பட உள்ளது.

இத்திட்டத்தினை செயல்படுத்தும் விதமாக, 5 பயனாளிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் நேற்று தலா ரூ.25,070/க்கான காசோலைகளை ஹஜ் மானியத் தொகையாக வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் செயலாளர் மற்றும் செயல் அலுவலர் முகம்மது நசிமுத்தின், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், சிறுபான்மை நல இயக்குநர் திருமதி மு. ஆசியா மரியம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (9.8.2023) தலைமைச் செயலகத்தில், சர்வதேச ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற மகேஷ் பசுபதி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மகேஷ் பசுபதி அவர்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

## கைத்தறி நாள்:

# கோ-ஆப்டெக்ஸில் கைத்தறி விற்பனை நிலையம்!

### அமைச்சர் ஆர்.காந்தி திறந்து வைத்தார்!

சென்னை, ஆக. 10 - 1905 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 7ஆம் நாள் அன்று தொடங்கப்பட்ட சுதேசி இயக்கத்தின் நினைவாக கைத்தறி தொழிலின் முக்கியத்துவம் மற்றும் அதன் பாரம்பரியம் மற்றும் நமது கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் தன்மை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக 2015ஆம் ஆண்டு முதல் தேசிய கைத்தறி நாள் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வகையில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டில், 07.08.2023 அன்று 9வது தேசிய கைத்தறி நாள் சென்னை, எழும்பூர், கோஆப்டெக்ஸ் வளாகத்தில் சிறப்புடன் கொண்டாடப்பட்டது.

கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் அவர்களின் சட்டமன்ற அறிவிப்பின் படி கைத்தறி நெசவின் மூலம் தயார் செய்யப்படும் துப்பட்டாக்கள், பைகள், வீட்டு உபயோகத் துணிகள் மற்றும் தோடர் கை வேலைபாடு துணி இரகங்கள் உள்ளிட்ட பிரத்யேகமான கைத்தறி விற்பனை செய்ய கோஆப்டெக்ஸில் கைத்தறி அலங்கார பொருட்கள் விற்பனை நிலையம் (Handloom Accessories Shop) கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இளம் கைத்தறி நெசவாளர்களுக்கான நெசவு பயிற்சி மையம் நெசவு தொழில் சார்ந்த தொழில் முனைவோராக மாற்றுவதற்காகவும், சென்னை கோஆப்டெக்ஸில் நெசவாளர் பயிற்சி மையம் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு 20 நபர்களுக்கு பயிற்சி சேர்க்கை ஆணை வழங்கப்பட்டது.

கைத்தறி துணி இரகங்களை மதிப்பு கூட்டி உள்நாட்டில் சந்தைப்படுத்துவது மட்டுமின்றி வெளிநாடு களுக்கு ஏற்றுமதி செய்ய கூடிய வகையில் கைத்தறி இரகங்களுக்கு அதிக விற்பனை விலை ஈட்டும் பொருட்டு, கைத்தறி துணி 1) எம்ப்ராய்டரி பயிற்சி மையம், 2) கைத்தறி துணி அச்சிடுதல் பயிற்சி மையம், 3) கைத்தறி துணி சிக்கன் காரி எம்ப்ராய்டரி பயிற்சி மையம் மற்றும் 4) கைத்தறி துணி ஆரி(AAri) வேலைபாடு பயிற்சி மையம் கோஆப்டெக்ஸில் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், துறையின் வடிவமைப்பு மேம்பாடு முயற்சியின் ஒரு பகுதியாக கைத்தறி இரகங்களில் சந்தைப்படுத்த கூடிய இரகங்களை உற்பத்தி மேற்கொள்ள ஏதுவாகவும், நவீன காலத்திற்கேற்ப கைத்தறி இரகங்களில் நவநாகரீக வடிவமைப்புகளை உடுத்தும் பொருட்டு தேசிய வடிவமைப்பு மையம், அகமாதாபாத் மற்றும் தேசிய ஆடை அலங்கார வடிவமைப்பு நிறுவனம், பெங்களூரு மற்றும் சென்னை ஆகியவை மூலம் உருவாக்கப்பட்ட 1000 புதிய வடிவமைப்புகள் கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் ஒன்பதாவது தேசிய கைத்தறி திருநாள் கொண்டாட்டத்தின் ஒரு அங்கமாக நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. மேற்படி புதிய வடிவமைப்புகளில் உருவாக்கப்பட்ட கைத்தறி பட்டு மற்றும் பருத்தி சேலை இரகங்களை வாடிக்கையாளர்கள் தாம் விரும்பும் வடிவமைப்புகளை உண்மையிலேயே தாம் அணிவது போன்று மெய்நிகர் காட்சி மூலம் (Virtual Reality) ஆடைகளை தேர்வு செய்துக்கொள்வதற்கு ஏதுவாக கோஆப்டெக்ஸில் நிறுவப்பட்டுள்ள மெய்நிகர் ஆடை அலங்கார கணினி வசதி மையத்தினை கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

ஜவுளித் தொழிலின் நுட்பங்கள், வடிவமைப்பு மற்றும் காலமாற்றத்திற்கேற்ற வண்ணங்களின் போக்கினை கணித்தல் ஆகியவற்றில் பங்களிப்பு திறன் கொண்ட வடிவமைப்பாளர்களை கண்டறிந்து ஊக்குவிக்கும் பொருட்டும், தமிழ்நாடு அரசால் 2022 23ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட மாநில அளவிலான சிறந்த இளம் வடிவமைப்பாளர் விருது வகையில், விருதுக்கு தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்ற முதல் மூன்று விருதாளர்கள் போக 22 இளம் வடிவமைப்பாளர்களுக்கு சான்றிதழ் மற்றும் ரூ.10,000/ வீதம் ஊக்கத்தொகை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

முதியோர் ஒய்வூதிய திட்டத்தின் கீழ் 20 பயனாளிகளுக்கு ஒய்வூதிய ஆணையும், முத்ரா கடன் திட்டத் தின் கீழ் 20 பயனாளிகளுக்கு கடனுதவி ஆணையும் மற்றும் நெசவாளர்களுக்கு வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் 5 பயனாளிகளுக்கு வீட்டு மனை பதிவு ஆணையும் இந்து சமயஅறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

மேலும், தேசிய கைத்தறி நாளை முன்னிட்டு கைத்தறி துறை சார்பாக மாவட்ட அளவில் கொண்டாடப்பட்ட விழாக்களில் முதியோர் ஒய்வூதிய திட்டத்தின் கீழ் 33 பயனாளிகளுக்கு ஒய்வூதிய ஆணையும், நெசவாளர் முத்ரா கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் 304 பயனாளிகளுக்கு ரூ.2.08 கோடி கடனுதவி ஆணையும், நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 15 பயனாளிகளுக்கு ரூ.49.16 இலட்சம் மற்றும் நெசவாளர் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் 18 நகர்புற பயனாளிகளுக்கு வீடு கட்டும் பணி ஆணையும் வழங்கப்பட்டுள்ளது.

கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் சட்டமன்ற அறிவிப்பின்படி, தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகளிடையே தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் கதர் மற்றும் கைத்தறி இரகங்களின் தனித்தன்மை, கலை நுணுக்கம், பாரம்பரியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் அதன் விற்பனையினை ஊக்குவிக்கவும் கைத்தறி இரகங்களை பிரபலப்படுத்தும் திட்டம் (Handloom Outreach Programme) செயல்படுத்தப்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் வாயிலாக பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் கைத்தறி தொழில் முனைவோர்களாக உருவாக இயலும். மேலும் கலைஞர் நூற்றாண்டு விழவினை முன்னிட்டு கைத்தறி துறை மற்றும் கோஆப்டெக்ஸ் இணைந்து 100 கல்லூரிகளில் இத்திட்டனை செயல்படுத்த திட்டமிடப் பட்டு, தேசிய கைத்தறி நாளன்று 30 கல்லூரிகளில் விழப்புணர்வு கூட்டம் நடத்தப்படுகிறது. மேலும் கைத்தறி நெசவாளர்களின் நலனை முன்னிட்டு, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறை உதவியுடன் 60 இடங்களில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகிறது.

இவ்விழாவில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சென்னை பெருநகர மேயர் திருமதி. ஆர்.பிரியா, எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஐ.பரந்தாமன், சென்னை பெருநகர துணை மேயர் எம். மகேஷ் குமார், பெருமாநகர சென்னை மாநகராட்சி 61வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. பாத்திமா முசாபர் அஹமது, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை அரசு முதன்மைச் செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ், கைத்தறி துறை ஆணையர் கே.விவேகானந்தன், துணிநூல் துறை ஆணையர் முனைவர். மா. வள்ளலார், தமிழ்நாடு கதர் கிராம தொழில் வாரிய முதன்மை செயல் அலுவலர் முனைவர். சீ.சுரேஷ்குமார், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் கோஆப்டெக்ஸ் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருநெல்வேலி
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.25/2023–2024/வ1/நாள்–08.08.2023
தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, திருநெல்வேலி வட்டம் அவர்களால், திருநெல்வேலி (நெ), க(ம)ப கோட்டம் சார்ந்த சி.ஆர்.ஐ.டி.பி 2023–24 (2 வேலைகள்) திட்டப்பணிக்கு இணையவழியில் மட்டுமே (வ.எண்.1 இரு உறை முறையில் மற்றும் வ.எண்.2 ஒரு உறை முறையில்) சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் 30.08.2023–14.00 மணிவரை வரவேற்கப்படுகிறது.
பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத்தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் 14.08.2023 முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.
செ.ம.தொ.இ/4380/ஒப்பந்தப்புள்ளி/2023
கண்காணிப்புப் பொறியாளர் (நெ) க(ம)ப வட்டம், திருநெல்வேலி
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"



தலைவர் கலைஞர் அவர்களின் 5 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு திண்டுக்கல் மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் மாளிகை முன்பு அவரது திருவுருவப்படத்திற்கு கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில் குமார் தலைமையில் மாலை அணிவித்து கழக நிர்வாகிகள் மவுன அஞ்சலி செலுத்தினர்.

## உலகம் இருக்கும் வரையில்

# தமிழ்நாடு மக்களுக்கு கலைஞர் செய்த பணி என்றும் நிலைத்து நிற்கும்!

### சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேட்டி!

நெல்லை, ஆக. 10 - நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட கழக அலுவலகத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் 5 ம் ஆண்டு நினைவை முன்னிட்டு சென்னை மெரினா கடற்கரையில் உள்ள கலைஞர் நினைவகம் போல் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் அவர்களின் மாதிரி நினைவிடத்தில் கலைஞர் அவர்கள் திருஉருவப்படத்திற்கு நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில் சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

பின்னர் சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் நம்முடன் இல்லை என்றாலும் இந்த உலகம் இருக்கும் வரையில் தமிழக மக்களுக்காக கலைஞர் செய்த பணி என்றும் நிலைத்து இருக்கும். அவரது புகழும் என்றும் நிலைத்திருக்கும்.



நெல்லை மத்திய மாவட்டத்தில் சென்னை கடற்கரையில் பேரறிஞர் அண்ணாவின் அருகில் கலைஞர் அவர்கள் துயில் கொள்ளும் நினைவகம் போன்று சிறப்பாக அமைக்கப்பட்டுள் ளது. அதற்கு காலையில் இருந்து பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் தி.மு.க.வினர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

நெல்லை மாவட்டத்தில் விவசாயத் திற்கு தண்ணீர் தட்டுப்பாடு உள்ளது. இது தொடர்பாக மாவட்ட ஆட்சியருடன் ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது. நெல்லை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிப்பதற்கு தேவையான பணிகளை மாவட்ட ஆட்சியர் மேற்கொண்டு வருகிறார். விவசாயிகளின் கோரிக்கைகள் முதலமைச்சர் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு விரைவில் நல்ல செய்தி வரும் என்று கூறினார்.

இவ்வாறு பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு அன்ன தானம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் சுப.சீதாராமன் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏ.எல்.எஸ்.லெட்சுமணன் பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ ஐயப்பன், மாவட்ட துணை செயலாளர் கிரிஜா குமார்,மாநகர அவை தலைவர் டாக்டர். பொன்மணி,மேயர் சரவணன், பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன், அன்டன் செல்லதுரை, நமச்சிவாயம், மாநகர இளைஞரணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டையப்பன்,மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் பொன்னையா பாண்டியன், மாநில மகளிர் தொண்டர் அணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த், ஒன்றியச் செயலாளர் அருள்மணி, மாநகர பொருளாளர் அண்ணாதுரை, அலிப் மீரான் மைதீன், அப்துல்கையூம், மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அனித்தா, முன்னாள் பொருளாளர் அருண்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் முகமது மீரான் மைதீன், இனியன், மாயா, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கனகராஜ்,

ஆ.க.மணி, கவிஞர் மூர்த்தி,மாமன்ற உறுப்பினர்கள் ஆமினா சாதிக், சுப்புலட்சுமி,சகாய ஜூலியட், ராஜேஸ்வரி, முன்னாள் கவுன்சிலர்கள் சுப்பையாபாண்டியன்,சங்கரலிங்கம், ராஜகுமாரி, ரேவதி அசோக், நெல்லை ரவி, ஆறுமுக ராஜா, முறுக்கு சாகுல், சேக் உஸ்மானி, ஜாபர் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு தினம்:அமைதிப் பேரணி! ரூ.18 லட்சத்தில் நல உதவிகள்!

### மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் வழங்கல்!

மதுரை, ஆக 10 - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருமங்கலத்தில் மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் அமைதி பேரணியாகச் சென்று தலைவர் கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி ரூபாய் 18 லட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது, அதன்விபரம்.

முத்தமிழ் அறிஞர், தமிழனத் தலைவர், தமிழர்களின் பாதுகாவலர், தலைவர் கலைஞர் அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மதுரை தெற்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் திருமங்கலம் நகராட்சி அலுவலகம் முன்பாக துவங்கி மாவட்ட கழக அலுவலகம் வரை மாபெரும் அமைதிப் பேரணி நடைபெற்றது. அதைத் தொடர்ந்து கழக அலுவலக வளாகத்தில் வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாவட்டச் செயலாளர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

அதைத் தொடர்ந்து தொள்ளாயிரம் ஏழை, எளியோர், கழகத்தினர், பொதுமக்கள் மற்றும் தலைமை கழக பேச்சாளர்கள் மதுரை சாதுராஜன், அலெக்சாண்டர் உள்ளிட்டோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். இந்நிகழ்வில் ரூபாய் 18லட்சம் மதிப்பில் வேஷ்டி, சேலை, மளிகைப் பொருட்கள் மற்றும் ரொக்கப்பணம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிகளில் மதுரை தெற்கு மாவட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக்கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழகத்தினர், பயனாளிகள், பொதுமக்கள் என பெரும் திரளானோர் பங்கேற்றார்கள்.

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
கண்காணிப்புப்பொறியாளர் (நெ), திட்டங்கள் வட்டம், தஞ்சாவூர்.
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இணையதள வழியில் மட்டும்)
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 02/2023-24 / முவஅ / நாள்: 02.08.2023
தமிழ்நாடு ஆளுநருக்காகவும், ஆளுநரின் சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர் (நெ), திட்டங்கள் வட்டம், தஞ்சாவூர் அவர்களால் திருச்சி (நெ) திட்டங்கள் கோட்டத்திற்கான சி.ஆர்.ஐ.டி.பி. 2023-24 திட்டப்பணி - "கீழப் பெரம்பலூர் - வேள்விமங்கலம் சாலை கி.மீ 0/10 ல் சின்னாறு ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் திரும்ப கட்டும் பணிக்கு இணையதள வழியில் மட்டுமே இனவாரி ஒப்பந்தப்புள்ளி (இரண்டு உறைகள் முறை) 30.08.2023, 15.00 மணி வரை (இணைய நேரப்படி) வரவேற்கப்படுகிறது.
பணியின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்களை https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் 11.08.2023 முதல் தெரிந்துக் கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.
செ.ம.தொ.இ./4343/ஒப்பந்தப்புள்ளி/2023
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்".
கண்காணிப்புப் பொறியாளர் (நெ) திட்டங்கள் வட்டம், தஞ்சாவூர்.



மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வாடிப்பட்டியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மாவட்ட செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி ஆலோசனையின்படி மாவட்ட துணை செயலாளர்ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., தலைமையில் மாபெரும் அமைதி பேரணி நடத்திகலைஞர் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி ஏழை எளியோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிய போது எடுத்தபடம். உடன் கழக நிர்வாகிகள் பால சுப்பிரமணியன், சோமசுந்தரபாண்டியன், பால்பாண்டியன், சேகர்,நேருபாண்டியன், பா.சிறைச் செல்வன், பசும்பொன்மாறன், தன்ராஜ், தனசேகர், உமாசிங்கதேவன், ரேணுகா ஈஸ்வரி, மருது பான்டியன், வக்கீல் கலாநிதி, ஜெயராமன், குமரன், ரகுபதி, சத்தியபிரகாஷ், வக்கீல் கார்த்திக், ஜெயகாந்தன்மற்றும் கழகத்தினர், கழக நிர்வாகிகள் உள்ளனர்.



திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியம், ராதாபுரம் ஊராட்சி தாழனோடையில் கனிமவள நிதி திட்டத்தின் கீழ் ரூ.21 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சிய ஒன்றிய தொடக்க பள்ளி கட்டடத்தினை பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (08.08.2023) திறந்து வைத்து பயன்பாட்டிற்கு கொண்டுவந்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் பா.முருகேஷ், கலசபாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி. சரவணன், மாநில தடகள சங்க துணை தலைவர் எ.வ.வே.கம்பன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் து.கணேசமூர்த்தி, தண்டராம்பட்டு ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி. பரிமளா கலையரசன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில்

# எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது திராவிட மாடல் அரசு!

## தண்டராம்பட்டு ஒன்றியத்தில் நடைபெற்ற விழாவில் அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

திருவண்ணாமலை, ஆக.10-

திருவண்ணாமலை, தண்டராம்பட்டு ஒன்றியத்தில் பள்ளிக்கல்வி துறையின் சார்பில் தாழனோடை ஊராட்சியில்; கனிமவள நிதி 2022-23 நிதி திட்டத்தின் கீழ் ரூ.21 இலட்சம் மதிப்பில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியின் புதிய வகுப்பறை கட்டடத்தினை திறந்து வைத்தார். மேலும் ராதாபுரம், நல்லவன்பாளையத்தில் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.30 இலட்சம் மதிப்பில் புதிய இரண்டு நியாயவிலைக் கடையினை பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்து பேசியதாவது:

திருவண்ணாமலை மாவட்டத்தில்கூட்டுறவுத் துறையின் மூலமாக பொது விநியோகத் திட்டத்தின் கீழ் 115 முழு நேர நியாய விலைக் கடைகளும், 536 பகுதிநேர நியாய விலைக் கடைகளும், மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் 8 நியாய விலைக் கடைகளும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் 3 அமுதம் நியாய விலைக் கடைகள் என ஆக மொத்தம் 1662 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. மேலும் நமது மாவட்டத்தில் செயல்படும் நியாய விலைக் கடைகளின் மூலம் மொத்தம் 7,87,880 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெற்று வருகின்றனர். இதில் அரிசி குடும்ப அட்டைகள் 6,50,850 சர்க்கரை குடும்ப அட்டைகள் 2,909 யுயுலு அரிசி குடும்ப அட்டைகள் 73,268 ழுயீ அரிசி பெறும் அட்டைகள் 60,079, யுபீ அரிசி பெறும் அட்டைகள் 776 ஆகும் இதில் மே 2021-22ம் ஆண்டிலிருந்து சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 08 முழு நேர நியாயவிலைக்கடைகளுக்கும் 08 பகுதி நேர நியாய விலைக்கடைகளுக்கும் ஆக மொத்தம் 16 நியாய விலைக் கடைகளுக்கும் புதியதாக சொந்த கட்டடம் கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது.

மேலும் 16 முழுநேர நியாயவிலைக்கடைகள் மற்றும் 10 பகுதிநேர நியாயவிலைகடைகள் என மொத்தம் 26 நியாய விலைக்கடைகளுக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி; மேம்பாட்டு நிதி, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், மகாத்மா காந்தி தேசிய உறுதி திட்டத்தின் கீழ் நிதி பெறப்பட்டு கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. அதேபோல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மகளிர்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்திவருகிறார். அதில் மகளிர் இலவச பேருந்து பயணத்திட்டத்தின் மூலம் வேலை மற்றும் வணிகர்த்திற்கு செல்லும் பெண்கள் இத்திட்டத்தின் மூலம் பெரிதும் பயன் பெற்று வருகின்றர்கள் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை மகளிர் சுய உதவி குழுக்களை ஊக்குவிக்கும் வகையில் அனைத்து கடன்களும் தள்ளுபடி செய்யப்பட்டது,

5 சவரனுக்கு குறைவாக உள்ள நகைகடன் பெற்று உள்ள விவசாயிகளுக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலமாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதேபோல் புதுமைப் பெண் திட்டத்தின் மூலமாக 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு தமிழ் வழியில் கல்வி பயின்ற பெண்களுக்கு மாதந்தோறும் ரூ.1000‰- வழங்கும் திட்டத்தை செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும் ஏழை, எளிய குடும்ப தலைவிகள் பயன்பெறும் வகையில்

கலைஞர் மகளிர் உரிமை திட்டம் மாதந்தோறும் ரூ.1000/- வழங்கும் திட்டம் தகுதி வாய்ந்தவர்களுக்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதி அன்று துவங்கப்பட உள்ளது. நான் உணவுதுறை அமைச்சராக இருந்த போது குடும்ப அட்டைதார்களின் நலன் கருதி அரிசி, சர்க்கரை, பாமாயில், பருப்பு உள்ளிட்ட அத்தியவாசிய பொருட்களை நியாயவிலைக்கடைகளில் இலவசமாக வழங்க முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களிடம் எடுத்துரைத்து இத்திட்டத்தை செயல்படுத்தப் பட்டது. மேலும் முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் அவர்கள் விவசாய குடும்பத்தைச் சார்ந்தவர் அந்த வகையில் நானும் ஒரு விவசாயி என்ற வகையில் பெருமிதம் கொள்கிறேன். ஏன்னென்றால் விவசாயி பெருகுடி மக்களுக்கு இலவசமாக மும்முனை மின்சாரம் வழங்கியது இன்னும் பல எண்ணற்ற திட்டங்களை விவசாயிகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தி வருவது திராவிட மாடல் அரசு என பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும்சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டப்பேரவைத் துணை தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் பா.முருகேஷ், மாநில தடகள சங்க துணைத்தலைவர் மரு.எ.வ.கம்பன், தமிழ்நாடு அரசு உடல் உழைப்பு தொழிலாளர் மற்றும் சமூக பாதுகாப்பு வாரியம் இரா.ஸ்ரீதரன், கலசப்பாக்கம் சட்ட மன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கணேசமூர்த்தி, கூட்டுறவு சங்கங்களின் திருவண்ணாமலை மண்டல இணைப்பதிவாளர் கோ.நடராஜன், ஒன்றிய குழு தலைவர்கள் திருமதி. கலைவாணி கலைமணி (திருவண்ணாமலை), திருமதி.பரிமளா கலையரசன் (தண்டராம்பட்டு), மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் இல.சரவணன், ராதாபுரம் ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.அலமேலு குமார், நல்லவன்பாளையம் ஊராட்சி மன்ற தலைவர் ரவி குமார், வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

### கனடாவில் ‘WPEG2023’ போட்டிகள்

# பதக்கங்கள் குவித்த தலைமைக் காவலர் லீலாஸ்ரீக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

சென்னை, ஆக.10-

கனடாவில் நடைபெற்ற ‘WPEG 2023’ ல் பங்கேற்று பதக்கங்கள் குவித்த தலைமைக் காவலர் லீலாஸ்ரீயைப் பாராட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**கனடாவின் வின்னிபெக் நகரில் நடந்து முடிந்த WPFG 2023இல் பல்வேறு போட்டிகளில் கலந்துகொண்டு தங்கம், வெள்ளி, வெண்கலம் என மூன்று பதக்கங்களைக் குவித்துள்ள தலைமைக் காவலர் லீலாஸ்ரீ அவர்களுக்கு என் மனமார்ந்த பாராட்டுகள்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### அரசின் சீரிய நடவடிக்கைகளால் தமிழ்நாட்டில் காட்டு யானைகளின் எண்ணிக்கை உயர்வு!

# ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பு அறிக்கை - 2023

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

சென்னை, ஆக.10-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (8.8.2023) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை யின் சார்பில் “ஒருங்கிணைந்த யானைகளின் கணக்கெடுப்பு 2023” அறிக்கையை வெளியிட்டார்.

அதன் விபரம் வருமாறு:

தமிழ்நாடு வனத்துறை அண்டை மாநிலமான கேரளா மற்றும் கர்நாடகா அரசுகளின் ஒத்துழைப்புடன், ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பினை 17.05.2023 முதல் 19.05.2023 வரை நடத்தியது. இக்கணக்கெடுப்பு,

ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள யானைகள் திட்ட இயக்குநரகத்தின் பரிந்துரையின் படி, யானைகளின் எண்ணிக்கையினை நேரடி மற்றும் மறைமுக முறைகளை பயன்படுத்தி கணக்கிடுவதையும், தமிழ்நாட்டின் 26 வனக்கோட்டங்களில் தொகுதி கணக்கிடுதல் முறை மற்றும் நீர்நிலைகளுக்கு அருகில் நேரடியாக காணப்பட்ட யானைகளின் தரவுகளை அடிப்படையாக கொண்டு, யானைகளின் இனத்தொகை கட்டமைப்பினை ஆராய்வதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டு நடைபெற்றது.

ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பு அறிக்கையின்படி, 2017ல் 2761 ஆக இருந்த யானைகளின் எண்ணிக்கை, தற்போது 2961 ஆக அதிகரித்துள்ளது.

தமிழ்நாட்டின் நான்கு பிற யானைகள் காப்பகங்களுடன் ஒப்பிடும்போது நீலகிரி கிழக்கு தொடர்ச்சி மலை யானைகள் காப்பகமானது அதிக எண்ணிக்கையில், அதாவது 2477 யானைகளைக் கொண்டுள்ளது.

இக்கணக்கெடுப்பின் மூலம் ஆண் யானை மற்றும் பெண் யானை சதவிகிதம் 1 : 2.17 ஆக உள்ளது. கிழக்கு தொடர்ச்சி மலைகளில் 1105 யானைகளும், மேற்கு தொடர்ச்சி மலைகளில் 1855 யானைகளும் உள்ளன. கிழக்கு தொடர்ச்சி மலைகளில் யானைகளின் எண்ணிக்கையை விட மேற்கு தொடர்ச்சி மலைகளில் யானைகள் அதிக எண்ணிக்கையில் உள்ளன.

இந்த ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பில் (12.05.2023 முதல் 16.05.2023 வரையில்) பல்வேறு யானை சரகங்களில் 1731 துறைப்பணியாளர் மற்றும் 368 தன்னார்வலர்கள், என மொத்தம் 2099 பேர் இக்கணக்கெடுப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். 3496 சதுர கி.மீ பரப்பளவிலான 690 பிளாக்குகளில் இக்கணக்கெடுப்பு நடைபெற்றது. ஒவ்வொரு 5 சதுர கி.மீக்கு கீழுள்ள பல சிறு பிளாக்குகளாக பிரிக்கப்பட்டு, 17.05.2023 அன்று கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. 18.05.2023 அன்று யானை பிண்டம் கணக்கெடுப்பு மூலமும் 19.05.2023 அன்று 26 வனக்கோட்டங்களில் நீர்க்குமிழிகள் முறை மூலமும் இக்கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

மேற்கண்ட கணக்கெடுப்பு முறையானது, டேராடூனில் உள்ள இந்திய வன விலங்குகள் நிறுவனம், மயிலாடுதுறை ANC கல்லூரி மற்றும் பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் கழகத்தின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்டது.

தமிழ்நாடு அரசு மேற்கொண்ட பல்வேறு வன உயிரின பாதுகாப்பு நடவடிக்கைகள், குறிப்பாக யானைகள் பாதுகாப்பு இயக்கத்தின் மூலமாக மேற்கொண்ட நடவடிக்கைகள் வாயிலாக தமிழ்நாட்டில் யானைகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அகத்திய மலை யானைகள் காப்பகம்,

தமிழ்நாடு யானைகள் பாதுகாப்பு இயக்கம், யானைகள் வாழிடங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்து தல் போன்ற தமிழ்நாடு அரசின் நடவடிக்கைகளும் இதற்கு காரணமாக விளங்கின என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வின் போது, வனத்துறை அமைச்சர் டாக்டர் மதிவேந்தன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா,

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் ஸ்ரீனிவாச ரா.ரெட்டி, முதுமலை புலிகள் காப்பக இயக்குநர் டி.வெங்கடேஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தமிழ் ஆய்வுலகத்திற்குப் பேரிழப்பு!

# புகழ்பெற்ற கல்வெட்டு அறிஞர் புலவர் செ.ராசு மறைவு!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் இரங்கல் செய்தி!

**சென்னை, ஆக.10-**

**புகழ்பெற்ற கல்வெட்டு அறிஞர் புலவர் செ. ராசு அவர்களின் மறைவு தமிழ் ஆய்வுலகத்திற்குப் பேரிழப்பு என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.**



புகழ்பெற்ற கல்வெட்டு அறிஞர் புலவர் செ. ராசு அவர்களின் மறைவை யொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

புகழ்பெற்ற கல்வெட்டு அறிஞர் புலவர் செ. ராசு (85) அவர்கள் வயது மூப்பின் காரணமாக மறைந்தார் என அறிந்து வருத்தமுற்றேன்.

பல கல்வெட்டுகள், செப்பேடுகள், சுவடிகளைப் பதிப்பித்துத் தமிழுக்குப் பெருந்தொண்டாற்றிய அவரது மறைவு தமிழ் ஆய்வுலகத்துக்குப் பேரிழப்பு ஆகும்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், தமிழறிஞர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறுமுதல்வர்மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 5ஆம் ஆண்டு நினைவு நாள்!

# நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் மலரஞ்சலி - நலஉதவிகள்!

## அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார்! டி.பி.எம். மைதீன்கான் முன்னிலையில்!

நெல்லை.ஆக.10.

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு பொதுமக்கள் பயன் பெறும் வகையில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன. நெல்லை மத்திய மாவட்ட திமுக சார்பில் மாவட்ட கழகஅலுவலகத்தில்சென்னை மெரினாவில் அமைந்துள்ளது போல் கலைஞர் அவர்களின்மாதிரிநினைவாலயம் அமைக்கபட்டுள்ளது. நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மைதீன் கான் முன்னிலையில் அதனை நிதி மற்றும் மனித மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு 0508 2023 அன்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி துவக்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் அறிவுறுத்தலின் படியும் தலைமையிலும்,மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள் 06082023 அன்று பாளை பகுதியில் பகுதி செயலாளர் அன்டன் செல்லதுரை ஏற்பாட்டில் மாற்றுத் திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் மேலப்பாளையம் பகுதியில் மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நடைபெற்றது.

7ம் தேதி அன்று மத்திய மாவட்ட திமுக அலுவலகத்தில் சென்னை மெரினாவில் அமைந்துள்ளது போல் வடிவமைக்கப் பட்டுள்ள மாதிரி நினைவாலயத்தை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மைதீன்கான் தலைமையில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று அஞ்சலி செலுத்தி ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.அதனை தொடர்ந்து மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா ஏற்பாட்டில் 1,000 ம் பேர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.நெல்லை மாநகராட்சி அலுவலகம் முன்பு மேயர் சரவணன் ஏற்பாட்டில் அமைக்கப்பட்ட கலைஞர் அவர்கள் திருவுருவபடத்துக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம் ஏற்பாட்டில் சக்தி பிள்ளையார் கோவில் முன்பு அமைக்கப்பட்ட கலைஞர் அவர்கள் திருவுருவ படத்திற்கு அஞ்சலி செலுத்தி அன்னதானம் வழங்கப்பட்டது.தச்சை பகுதி செயலாளர் சுப்பிரமணியன் ஏற்பாட்டில் அமைக்கப்பட்ட கலைஞர் அவர்கள் திருவுருவ படத்துக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு மீனாட்சிபுரத்தில் 100 மரக்கன்றுகள் நடப்பட்டது.

மாநகர இளைஞரணி அமைப்பாளர் கருப்புசாமி கோட்டையப்பன் ஏற்பாட்டில் என்.ஜி.ஓ காலனி ஜெயா கார்டன் முன்பு அலங்காரமாக அமைக்கப்பட்ட கலைஞர் அவர்கள் திருவுருவ படத்திற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் முகமது மீரான் மைதீன் ஏற்பாட்டில் பாளையங்கோட்டை மனநலம் குன்றியோர் பள்ளியில் 200 மாணவர்களுக்கு அறுசுவை மதிய உணவு வழங்கப்பட்டது.

மானூர் கிழக்கு ஒன்றியத்தில் கிழக்கு ஒன்றிய செயலாளர் அருள்மணி ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு கங்கைகொண்டான் மற்றும் மானூர் பஜாரில் அஞ்சலி செலுத்தப்பட்டு, கங்கைகொண்டானில் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கியும், நாஞ்சாலன்குளம் கிராமத்தில் ஆதரவற்ற குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன்,தணிக்கை குழு உறுப்பினர் சுப.சீதாராமன்,மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த், தலைமை செயற்குழு உறுப்பினர் லெட்சுமணன், மாநகர செயலாளர் சுப்பிர மணியன்,மாவட்ட துணை செயலாளர்கள் தர்மன், சுரேஷ், கிரிஜா குமார்,நெல்லை கிழக்கு மாவட்ட தலைமை செயற்குழு உறுப்பினர் சித்திக்,பொதுக்குழு உறுப்பினர்கள் பரமசிவஐய்யப்பன்,கனகராஜ்,பாளை மத்திய ஒன்றிய செயலாளர் போர்வெல் கணேசன்,மதிமுக மாநில துணை பொதுச் செயலாளர் ராஜேந்திரன், மதிமுக மாவட்ட செயலாளர் நிஜாம், சட்டத்துறை செயலாளர் அமல்ராஜ், மாவட்ட துணை செயலாளர் மணப்படை வீடு மணி,பகுதி செயலாளர் துபாய் சாகுல்,பொதுக்குழு உறுப்பினர்கள் ராஜேஸ்வரி, கண்ணன், மாநகர அவை தலைவர் பொன் மணி,முன்னாள் மாவட்ட துணை செயலாளர் ஆ.க. மணி, மாவட்ட பொருளாளர் அருண்குமார், முன்னாள் துணை செயலாளர் நவநீதன், மாவட்ட பொருளாளர் பூக்கடை அண்ணாதுரை, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வில்சன் மணித்துரை,

துணை அமைப்பாளர்கள் மிக்கேல்,சபீர் முகமது,மாயா,மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் செல்வம்,ரவி, குரு ஜெஸி,இனியன்,மாநகர பிரதிநிதிகள் இசக்கிபாண்டியன், வேங்கை வெங்கடேஷ்,கார்டன் சேகர், ஜவகர்,முகமது அலி,வல்லநாடு முத்து, பாலன்,சுரேஷ்,நித்தியபாலையா,சுந்தர், தகவல் தொழில்நுட்பணி ஜோக்கின் சாமுவேல்,சிவக்குமார்,காசிமணி, மாவட்ட விவசாய அமைப்பாளர் பொன்னையா பாண்டியன்,மாநகர தலைவர் முத்து, மாநகர விவசாய அணி தலைவர் முருகன்,மகளிர் அணி ராஜகுமாரி, அனித்தா, சௌந்தரம், பத்மா, மேரி,ராஜேஸ்வரி,சுப்புலட்சுமி,சகாய ஜீலியட் மேரி, வசந்தா, மேலப்பாளையம் மண்டல தலைவர் கதீஜா இக்லாம் பாசிலா,வட்ட கழக செயலாளர்கள் அருள்இளங்கோ, வேல்முருகன், செந்தில், தொப்பி காஜா,செல்வகுமார்,ஜாய் மரகதம்,பத்மராஜ்,ஆவின் கல்யாணி, மலைக்கண்ணன்,ஆட்டோ அழகு, குருநாதன், சுந்தரம்,வெங்கடேஷ், தங்கச்சாமி,ஷாஜகான்,குழந்தை இயேசு, கணபதி,கல்லூர் பாலா,கழக பேச்சாளர் நெல்லை ரவி,பேரங்காடி ஐயப்பன், பெப்சி சரவணன், செண்டு, மைதீன், கண்ணையா பாண்டியன், இம்ரான், பிஸ்மி அசன்,உதுமான்,சித்திக்,சாகுல் ஹமீது, அலி, ஆதம்பாவா, அப்துல் காதர், பாலா,கீர்த்தி,கந்தசாமி,சண்முகசுந்தரம், உட்பட கழக முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



கடலூர் மாநகர தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அமைதிப் பேரணி மற்றும் 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் மாநகரச் செயலாளர் கே.எஸ். ராஜா வழங்கினார். இதில் து. தங்கராசு, இள.புகழேந்தி, மேயர் சுந்தரி ராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## மக்கள் நலனுக்காக மழை, வெயில், இரவு, பகலென்று பாராமல் உழைக்கும்

# துப்புரவுப் பணியாளர்களின் தேவைகளை நிறைவேற்றும் முதல்வர்!

## முத்தமிழறிஞர் கலைஞரின் ஐந்தாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி

## சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!



சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சரும் கழக இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் துப்புரவுத் தொழிலாளர்களை கவுரவித்து நலஉதவிகள் வழங்கினார்.

**சென்னை, ஆக. 10 -**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய ஐந்தாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, சென்னை மேற்கு மாவட்டத்தின் சார்பாக, சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த 1,500 துப்புரவுப் பணியாளர்களைக் கௌரவித்து அமைச்சர் - கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:-**

தமிழ்நாடு முழுக்க எத்தனையோ தொகுதிகளுக்கு, எத்தனையோ மாவட்டங்களுக்கு அரசு நிகழ்ச்சியாக, கழக நிகழ்ச்சியாக பயணம் மேற்கொண்டு கலந்து கொண்டாலும், நம்முடைய சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதிக்கு வருவதென்றால் ஒரு தனிச் சிறப்பு. என்னதான் பகல் முழுக்க வெளியில் போனாலும், இரவானால் தங்குவதற்கு வீட்டிற்குப் போய்தான் ஆக வேண்டும். அதுபோன்ற ஒரு நினைப்புதான் இந்தச் சேப்பாக்கம்திருவல்லிகேணி தொகுதிக்கு வரும்போது அந்த நினைப்பு வரும்.

**முத்தமிழறிஞர் வென்ற தொகுதி சேப்பாக்கம்!**

அதைவிடச் சிறப்பு இன்றைக்கு நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய வீட்டிற்கு வந்தது போல ஒரு எண்ணம் எனக்கு வந்திருக்கிறது. ஏனென்றால், இது முத்தமி ழறிஞர் கலைஞர் அவர்கள் நின்று, வென்ற சேப்பாக்கம்திருவல்லிகேணி பகுதி இரண்டு முறை இந்தத் தொகுதிக்கு சட்டமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறார்.

இப்போது இந்தத் தொகுதிக்கு சட்டமன்ற உறுப்பினராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளேன். அதற்குக் காரணமாக இருப்பது இங்கு அமர்ந்திருக்கக்கூடிய நீங்கள்.

இந்த சேப்பாக்கம்திருவல்லிக்கேணி பகுதியில் பல நூற்றுக் கணக்கான நிகழ்ச்சியில் நான் கலந்து கொண்டிருக்கிறேன். ஆனால், இன்றைக்கு இந்த நிகழ்ச்சி என்னுடைய மனத்திற்கு மிகவும் நெருக்கமான நெகிழ்ச்சியான நிகழ்ச்சி.

**ஏழை - எளிய மக்களுக்கு நாம் வழங்கும் உதவி!**

இந்த நிகழ்ச்சியை நான் ஏன் இவ்வளவு முக்கியமான நிகழ்ச்சி என்று சொல்கிறேன் என்றால், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் யாருக்காக உழைத்தாரோ, எந்த அடித்தட்டு ஏழை, எளிய மக்களுக்காக வாழ்நாள் முழுக்க உழைத்தாரோ, அவர்களுக்கு இந்த நலத்திட்ட உதவிகளை நாம் இங்கே வழங்கிக்கொண்டிருக்கின்றோம்.

இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்த மாவட்டக் கழகச் செயலாளர் சகோதரர் சிற்றரசு அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!**

சென்னை, ஆக. 10-

டெல்லி ஆட்சி அதிகாரத்தை பறிக்கும் வகையிலும், மக்களாட்சியின் மாண்பை சீர்குலைக்கும் வகையிலும் ஒன்றிய அரசால் டெல்லி சேவைகள் மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இன்று டெல்லி அரசின் அதிகாரம் பறிக்கப்பட்டு இருக்கிறது. நாளை? என்று குறிப்பிட்டு 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.




அது வருமாறு:-

யாருக்கு அதிகாரம்?. இந்த கேள்வி தான் இன்று டெல்லி ஆட்சி அதிகாரத்தை பறிக்கும் வகையில், மக்களாட்சியின் மாண்பை சீர்குலைக்கும் வகையில், ஒன்றிய அரசால் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை இடமாற்றம் செய்யும் சேவைகள் மசோதாவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற வைத்து இருக்கிறது. இத்தனைக்கும் டெல்லியில் ஆட்சி அதிகாரம் மக்களால் தேர்வு செய்யப்பட்ட அரசுக்குத்தான் உண்டு என்று உச்ச நீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வு தீர்ப்பளித்த பிறகும், அந்த தீர்ப்பை கொஞ்சம் கூட மதிக்காமல், அவசர கதியில் அவசர சட்டம் நிறைவேற்றிவிட்டு, இப்போது டெல்லி சேவைகள் மசோதாவை நாடாளுமன்றத்தில் தனக்கு உள்ள பெரும்பான்மை மூலம் நிறைவேற்றி மகிழ்ந்து இருக்கிறது ஒன்றிய பா.ஜ அரசு. டெல்லி என்ற ஒரு யூனியன் பிரதேசத்திற்கு எதிராக ஏன் இத்தனை வேகமாக ஒன்றிய அரசு செயல்படுகிறது என்று பார்த்தால் அத்தனையும் அதிர்ச்சி ரகம்.

2013 டிசம்பர் 8ம் தேதி முதல் டெல்லி முதல்வர் பதவியில் இருந்து வருகிறார் ஆம்ஆத்மி நிறுவனர் கெஜ்ரிவால். 2014 பிப்ரவரி 14ம் தேதி முதல் 2015 பிப்ரவரி 14 வரை இடையில் ஒருவருடம் ஜனாதிபதி ஆட்சி. அதன்பிறகு நடந்த தேர்தலிலும் கெஜ்ரிவால் கட்சி தான் ஆட்சியை பிடித்தது. அங்கு மீண்டும் ஆட்சியைப் பிடித்து விட வேண்டும் என்பது பா.ஜ.வின் கனவு. ஆனால் 1998ம் ஆண்டுக்கு பிறகு டெல்லி மக்கள் பா.ஜ.,வை அங்கீகரிக்கவில்லை.

2014, 2019 எம்.பி. தேர்தலில் டெல்லியில் உள்ள 7 இடங்களையும் பா.ஜ., தான் கைப்பற்றியது. ஆனால் 15 வருடம் தொடர்ந்து அவர்கள் ஆட்சி புரிந்த டெல்லி மாநகராட்சியை இந்த முறை ஆம்ஆத்மி பறித்துக் கொண்டது. அடுத்த ஆண்டு நடைபெற உள்ள மக்களவை தேர்தலிலும் முன்பு போல் 7க்கு 7 தொகுதிகள் பா.ஜ.வுக்கு கிடைப்பது சந்தேகம்தான் என்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் டெல்லி ஆட்சி அதிகாரத்திற்குள் ஒன்றிய அரசை கெஜ்ரிவால் ஒருபோதும் அனுமதிப்பது இல்லை. இதனால் எழுந்த கோபம் தான் தற்போது டெல்லி ஆட்சி அதிகாரத்தை கெஜ்ரிவாலிடம் இருந்து பறித்துக்கொள்ளும் நடவடிக்கையை டெல்லி சேவைகள் மசோதா மூலம் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றி இருக்கிறது ஒன்றிய பா.ஜ., அரசு. நாட்டின் தலைநகர் என்பதால் ஐ.பி.எஸ். அதிகாரிகள் டெல்லி அரசின் கட்டுப்பாட்டிற்குள் வர மாட்டார்கள். அதனால் டெல்லியில் சட்டம் ஒழுங்கை பராமரிக்கும் பணி ஒன்றிய உள்துறை அமைச்சகத்திடம் சென்று விடும்.

இப்போது ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும் டெல்லி அரசின் கட்டுப்பாட்டிற்குள் வரமாட்டார்கள். அப்படியானால் டெல்லி மாநகராட்சி அதிகாரத்தை விட டெல்லி முதல்வர் கெஜ்ரிவாலின் அதிகாரம் குறைக்கப்பட்டு விடும். டெல்லி சட்டப்பேரவைக்கு எந்த வித மதிப்பும் இல்லை. ஆனால் ஒன்றிய அரசால் நியமிக்கப்படும் துணை நிலை ஆளுநர், சட்டப்பேரவையை விடவும், மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட அரசை விடவும், அமைச்சரவையை விடவும் அதிக அதிகாரம் பொருந்தியவர் ஆகிறார். மக்களாட்சி ஜனநாயகத்தை சீர்குலைக்கும் இந்த நடவடிக்கையை அ.தி.மு.க., ஆந்திர முதல்வர் ஜெகனின் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ், ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக்கின் பிஜூஜனதா தளம் உள்ளிட்ட கட்சிகள் வரிந்து கட்டிக்கொண்டு ஆதரவு அளித்து உள்ளன. அதனால் 29 வாக்கு வித்தியாசத்தில் மசோதா நிறைவேறி இருக்கிறது. இன்று டெல்லி அரசின் அதிகாரம் பறிக்கப்பட்டு இருக்கிறது. நாளை?

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்

## தக்கலை தெற்கு ஒன்றிய வாக்குச்சாவடி முகவர்கள் ஆய்வுக் கூட்டம்!

**மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ. மகேஷ் சிறப்புரை ! -எம்.ஆர்.ரமேஷ் பாபு தலைமை!**

குமரி, ஆக.10-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், தக்கலை தெற்கு ஒன்றிய வாக்குச்சாவடி முகவர்கள் (BLA 2) ஆய்வுக் கூட்டம் 08.08.2023, செவ்வாய் அன்று மாலை5.00 மணிக்கு இரணியல், உமா மண்டபத்தில் தக்கலை தெற்கு ஒன்றிய செயலாளர் எம். ஆர். ரமேஷ் பாபு தலைமையிலும், மாநில பொதுக்குழு உறுப்பினர் ஜோசப் ராஜ், பேரூர் கழக செயலாளர்கள் சுப்பிரமணியம் பிள்ளை, எட்வின், காட்வின், சுரேஷ் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் கலந்து கொண்டு வாக்குச்சாவடி முகவர்களுக்கு (BLA 2) ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். மேலும் கூட்டத்தில் யார் யார் கலந்து கொண்டார்கள் என்ற வருகைப் பதிவேடு ஆய்வு செய்யப்பட்டது. வருகை தராத வாக்குச்சாவடி முகவர்களுக்கு (BLA 2) ஒன்றிய மற்றும் பேரூர்ச் செயலாளர்கள் மூலம் தகவல் தெரிவித்து ஆகஸ்ட் மாதம் 17ம் தேதி இராமநாதபுரத்தில் கழக தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறவிருக்கும் தென் மண்டலத்துக்கு உட்பட்ட வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்கள் (BLA 2) பயிற்சி பாசறைக் கூட்டத்தில் கலந்து கொள்ள செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது.

கூட்டத்தில் தி.மு.க. பொறியாளர் அணி மாவட்ட அமைப்பாளர் ராதா கிருஷ்ணன், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் பிரிட்டோ சேம், வாக்குச்சாவடி முகவர்கள் (BLA 2) உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆகஸ்ட் மாதம் 17ம் தேதி வியாழக்கிழமை அன்று இராமநாதபுரம், தேவிப்பட்டினம் சாலை, பேராவூர் என்ற இடத்தில் நடைபெறும் வாக்குச்சாவடி முகவர்கள் (BLA 2) பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2024ல் நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வாக்குச்சாவடி முகவர்களின் தேர்தல் பணி குறித்து ஆலோசனைகள் வழங்க உள்ளார். எனவே குமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட தக்கலை தெற்கு ஒன்றிய அனைத்து வாக்குச்சாவடி முகவர்களும் தவறாமல் கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

01.01.2024 நாளை தகுதி ஏற்பு நாளாக கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தத்தினை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அதன் அடிப்படையில் 01.01.2024ல் 18 வயது நிரம்பியவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும், புதியதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் நீக்கவும் தீவிர நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டும்.

வாக்காளர் சேர்க்கும் பணியின் போது தி.மு.க. சார்பாக தொகுதி வாரியாக நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி நிலை முகவர்கள் தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுடன் இணைந்து மேற்கண்ட வாக்காளர் பட்டியல் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் வாக்காளர் சேர்ப்புப் பணி மற்றும் சிறப்பு முகாம்களில் குமரி கிழக்கு மாவட்டம், தக்கலை தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பேரூர், வார்டு, கிளைச் செயலாளர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உட்பட அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி வாக்காளர் பட்டியல் சீரமைப்புப் பணிகளில் தங்களை ஈடுபடுத்தி கொள்ளுமாறு இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

---

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க.

## சார்பு அணி நிர்வாகிகள் அறிமுகம் - ஆலோசனைக் கூட்டம்!

**மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!**

தென்காசி.ஆக.9-

தென்காசி வடக்கு மாவட்ட சார்பு அணி நிர்வாகிகளுக்கான அறிமுகம் மற்றும் ஆலோசனை கூட்டம் சங்கரன்கோவில் மேலரதவீதியில் உள்ள கோகுலம் மண்டபத்தில் இன்று (10.08.2023 - வியாழக்கிழமை) காலை 9 மணி அளவில் நடைபெறுகிறது.என தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது.

கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதியார் அவர்களின் வழிகாட்டுதலின் படி தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பு அணிகளின் தலைவர், துணை தலைவர்,அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள கழக உடன் பிறப்புகளுக்கான அறிமுகம் மற்றும் ஆலோசனை கூட்டம் இன்று (10 ஆம் தேதி வியாழக்கிழமை) காலை 9 மணி அளவில் சங்கரன்கோவில் கோகுலம் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

ஆகையால் இந்நிகழ்வில் தலைமைக் கழக நிர்வாகிகள்,மாவட்ட,ஒன்றிய, நகர, பேரூர்,கழக நிர்வாகிகள் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

முத்தமிழறிஞர் கலைஞர் 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி!

## அரக்கோணம் நகர தி.மு.க. சார்பில் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி!

**நகரச் செயலாளர் எல்.ஜோதி தலைமையில்!**

திருவள்ளூர், ஆக. 10-

தமிழக முதல்வர் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சரும் ராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளர் ஆர்.காந்தி வழிகாட்டுதலின்படி அரக்கோணம் நகரம் சுவால்பேட்டை பிள்ளையார் கோயில் அருகில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் புகைப் படத்திற்கு அரக்கோணம் நகர கழகச் செயலாளர் எல்.ஜோதி. மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அரக்கோணம் நகரம் விண்டர்பெட், பழைய பேருந்து, நிலையம் பழனிபேட்டை மற்றும் 36 வார்டுகளிலும் நினைவு அஞ்சலி செலுத்தப்பட்டது.

உடன் மு.கண்ணையன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் என்.ராஜ்குமார், முன்னாள் மாவட்ட துணை செயலாளர் லட்சுமி பாரி, அரக்கோணம் நகர மன்ற தலைவர் துரை சீனிவாசன் Mc

நகர அவை தலைவர் கோ.வ.தமிழ்வாணன், நகர துணை செயலாளர் நந்தா தேவி Mc, நகர துணை செயலாளர் எஸ். ரமேஷ்பாபு, நகர பொருளாளர் ஆர்.கே.லிங்கம். மாவட்ட பிரதிநிதி தமிம் அன்சாரி, மாவட்ட பிரதிநிதி பாலகிருஷ்ணன்

மாவட்ட பிரதிநிதி எம். கே.சிவா, மாவட்ட. தொண்டர் அணி.அமைப்பாளர்

எஸ்.பிரசாத், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட கழக செயலாளர்கள்,

நகர மன்ற உறுப்பினர்கள், வட்ட கழக பிரதிநிதிகள், நகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நகர மகளிர் அணியினர், கழகம் முன்னோடிகள் கலந்து வாழ்ந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினர். டி. அந்தோணி 32வது வார்டு வட்ட பிரதிநிதி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

---

தி.மு.க. மாணவர் அணி

## மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

**மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவிப்பு!**

தி.மு.க. மாணவர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், வரும் 14.08.2023 திங்கட்கிழமை, காலை 10.00 மணியளவில், அண்ணா அறிவாலயத்தில் உள்ள, "கழக அலுவலகத்தில்", எனது தலைமையில் மாணவர் அணித் தலைவர் இரா. ராஜீவ்காந்தி, மாணவர் அணி இணைச் செயலாளர்கள் சி.ஜெரால்டு, எஸ்.மோகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில், மாநில மாணவர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1) தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா.

2) மாணவர் அணி ஆக்கப் பணிகள் - குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 9.8.2023

**சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ.**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி

---

காஞ்சி மணிமொழியார் தமிழ்ப் பேரவை சார்பில்

## கலைஞர் நினைவு நாள் நிகழ்வு!

சென்னை, ஆக.9-

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு காஞ்சி மணிமொழியார் தமிழ்ப் பேரவையின் சார்பில் கோடம்பாக்கம், என். எஸ். கிருஷ்ணன் சாலையில் அமைந்துள்ள காஞ்சி மணிமொழியார் வளாகத்திலுள்ள குறளகத்தில் ஒப்பற்றத் தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவப்படம் வைத்து மாலை அணிவித்து மலர் தூவி புகழ் வணக்கம் செய்த நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் கழகத் தோழர்கள் கலந்து கொண்டு தலைவர் கலைஞர் மக்களுக்கு செய்த நலன்களையும், தொண்டுகளையும் செயல் திட்டங்களையும் மக்களிடம் சேர்த்து அவரை புகழ்ந்து, பாராட்டி, வாழ்த்தி வணங்கி, மரியாதை செய்யப்பட்டது.

இதேபோல் பேரறிஞர் அண்ணா பிறந்த ஊரும், பெரியவர் மணிமொழியார் பிறந்த ஊரும் காஞ்சிபுரம் மாமல்லன் நகர், டி.கே.ஸ் மணி தெருவில் உள்ள போர்வாள் இதழ் ஆசிரியரும் பேரசிரியர் மா.இளஞ்செழியன் இல்லத்தில் கலைஞர் திருவுரு வப்படம் வைத்து மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்யப்பட்டது.

---



நாகர்கோவில் மாநகர தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளர் விஷாக் மோகன் ஏற்பாட்டில்நாகர்கோவில்மாநகராட்சி27வதுவார்டுபகுதியைச்சேர்ந்தமாற்றுக்கட்சியினர் விஷ்ணு, விஷால், மது உள்பட 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் - நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் சால்வை அணிவித்து கழகத்தில் இணைந்தனர். தி.மு.க.வில் இணைந்த இளைஞர்களுக்கு நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேசுக்கு சால்வை அணிவித்து வரவேற்றார். நிகழ்வில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அகஸ்தீசன், துணை அமைப்பாளர் சரவணன், பகுதிச் செயலாளர் துரை மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் சி.டி. சுரேஷ், துணை அமைப்பாளர்கள் அருள் செல்வின், அகமதுஷா, முத்துக்குமார் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

கழகத்தில் உள்ள முன்னோடிகள், மாற்றுத்திறனாளிகள், மருத்துவம் – கல்வி உதவி தேவைப்படுவோருக்கு உதவித்தொகை வழங்கிடும் வகையில், கழக இளைஞர் அணி அறக்கட்டளைக்குப் பலரும் நிதி அளித்து வருகின்றனர். அந்த வகையில், மாவட்ட, மாநில, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டத்தின்போது நிதி உதவி வழங்கியவர்களின் விவரம் வருமாறு:–

| வ. எண் | பெயர், பொறுப்பு, கழக மாவட்டம் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | கே.வி.லோகேஷ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், திருவள்ளூர் கிழக்கு மாவட்டம். | 1,00,000 |
| 2 | ஜெ.திருவாசகம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், ஈரோடு தெற்கு மாவட்டம். | 55,555 |
| 3 | தங்க நாராயணசாமி, மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், கடலூர் மேற்கு மாவட்டம். | 25,000 |
| 4 | எம்.எஸ்.கணேஷ்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், கடலூர் மேற்கு மாவட்டம். | 25,000 |
| 5 | ஜி.கே.இனியன், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், சென்னை வடகிழக்கு மாவட்டம். | 20,000 |
| 6 | ஜெ.எல்.ஈஸ்வரப்பன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், இராணிப்பேட்டை மாவட்டம். | 11,000 |
| 7 | நாகனி பி.செந்தில்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், சிவகங்கை மாவட்டம். | 10,000 |
| 8 | ஆதவன் அதியமான், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், மதுரை தெற்கு மாவட்டம். | 10,000 |
| 9 | எம்.கே.மருது (எ) மருதமுத்து, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், மயிலாடுதுறை மாவட்டம். | 10,000 |
| 10 | க.முத்துக்குமார், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், கடலூர் கிழக்கு மாவட்டம். | 10,000 |
| 11 | கே.சம்பத்ராஜா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், இராமநாதபுரம் மாவட்டம். | 10,000 |
| 12 | செ.யுவராஜ், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், திருவள்ளூர் கிழக்கு மாவட்டம். | 10,000 |
| 13 | கே.ஆர்.அழகுப்பாண்டி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், மதுரை வடக்கு மாவட்டம். | 10,000 |
| 14 | ஜி.கார்த்திகேயன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், கடலூர் கிழக்கு மாவட்டம். | 10,000 |
| 15 | எஸ்.ஐவேந்திரன், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், தென்காசி தெற்கு மாவட்டம். | 5,000 |
| 16 | எம்.பி.அருள், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம். | 5,000 |
| 17 | அந்தமான் நிகோபார் மாநில இளைஞர் அணி. | 5,000 |
| 18 | தென்பழஞ்சி பா.சுரேஷ், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், மதுரை தெற்கு மாவட்டம். | 5,000 |
| 19 | செ.தினகரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், விழுப்புரம் தெற்கு மாவட்டம். | 5,000 |
| 20 | டாண்டி பிரகாஷ், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், சென்னை தென்மேற்கு மாவட்டம். | 5,000 |
| 21 | வ.சுப்பிரமணியன், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், பெரம்பலூர் மாவட்டம். | 5,000 |
| 22 | சி.எம்.எஸ்.இப்னு மசூது, மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், கோவை மாநகர் மாவட்டம். | 5,000 |
| 23 | ந.வசந்தகுமார், காரைக்கால். | 5,000 |
| 24 | பி.வி.செல்வக்குமார், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர், கோவை. | 5,000 |
| 25 | கே.இ.பிரகாஷ், மாநில இளைஞர் அணித் துணை செயலாளர், ஈரோடு தெற்கு மாவட்டம். | 3,050 |
| 26 | வி.வி.கிரிராஜ், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், திருப்பத்தூர் மாவட்டம். | 3,000 |
| 27 | டி.எஸ்.வி.தமிழ்மணி, மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், திருப்பத்தூர் மாவட்டம். | 3,000 |
| 28 | குன்னம் பா.ராமமூர்த்தி, மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம். | 2,500 |
| 29 | தையூர் வீ.விஜயகுமார், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம். | 2,500 |
| 30 | பல்லாவரம் கோ.ஜானகிராமன், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம். | 2,500 |
| 31 | எஸ்.அருண்ராஜ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், கள்ளக்குறிச்சி மாவட்டம். | 2,100 |
| 32 | வி.சீவலமுத்து (எ) குமார், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், சேரன்மகாதேவி மேற்கு, திருநெல்வேலி கிழக்கு மாவட்டம். | 2,000 |
| 33 | கோவை அருண் (எ) அருண்குமார், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், கோவை மாநகர் மாவட்டம். | 2,000 |
| 34 | ச.சுப்ரமணியன், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், தென்காசி தெற்கு மாவட்டம். | 2,000 |
| 35 | நூ.அன்சாரி பாஷித், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், புதுக்கோட்டை வடக்கு மாவட்டம். | 2,000 |
| 36 | பெ.மணி, மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம். | 2,000 |
| 37 | ச.ராஜேஷ், மாநகர இளைஞர் அணித் துணை அமைப்பாளர், தாம்பரம் மாநகரம், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம். | 2,000 |
| 38 | வீ.கார்த்திக், மாநகர இளைஞர் அணித் துணை அமைப்பாளர், தாம்பரம் மாநகரம், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம். | 2,000 |
| 39 | பி.கே.ஏ.சத்தியபிரபு, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர், தாம்பரம் மாநகரம், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம். | 2,000 |
| 40 | வி.ஜெ.அன்பழகன், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், கடலூர் கிழக்கு மாவட்டம். | 2,000 |
| 41 | பா.உதயகுமார், மாநில இளைஞர் அணித் துணை அமைப்பாளர், மும்பை மாநிலம் | 1,111 |
| 42 | நா.நசுருதீன், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், புதுக்கோட்டை தெற்கு மாவட்டம். | 1,000 |
| 43 | பி.எல்.இளையராஜா, மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், புதுக்கோட்டை தெற்கு மாவட்டம். | 1,000 |
| 44 | ஆர்.ஏ.மணிகண்டன், மாநகர இளைஞர் அணித் துணை அமைப்பாளர், காஞ்சிபுரம் மாநகரம், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம். | 1,000 |
| 45 | ஆ.சதாம், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், கடலூர் கிழக்கு மாவட்டம். | 1,000 |
| 46 | ஜெ.விஜயகுமர், வட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், ஆலந்தூர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம். | 1,000 |
| 47 | ஆணழகன் டி.ஆர்.திலீபன், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர் திருவள்ளூர் மேற்கு மாவட்டம். | 1,000 |
| 48 | டி.சங்கர், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், திருவள்ளூர் கிழக்கு மாவட்டம். | 1,000 |
| 49 | ம.கிரண், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்டம். | 1,000 |
| 50 | டி.ஆர்.ரவி, மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், இராணிப்பேட்டை மாவட்டம். | 1,000 |
| 51 | ப.சுகுமார், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர், காஞ்சிபுரம் மாநகரம். | 1,000 |
| 52 | எஸ்.பிரசாத், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், இராணிப்பேட்டை மாவட்டம். | 1,000 |
| 53 | இரா.பிரபாகரன், மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், நாமக்கல் கிழக்கு மாவட்டம். | 1,000 |
| 54 | ஆர்.விக்னேஷ் (மருது), மதுரை வடக்கு மாவட்ட இளைஞர் அணி. | 500 |
| 55 | அமரன் உத்தமன், மாநில இளைஞர் அணித் துணை அமைப்பாளர், மும்பை மாநிலம். | 500 |
| | மொத்தம் | 4,17,316 |

"அன்பகம்"
சென்னை – 18.
நாள் : 09–08–2023.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் தக்கலை தெற்கு ஒன்றியக் கழக வாக்குச்சாவடி முகவர்கள் ஆய்வுக் கூட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் – மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

### திண்டுக்கல் கிழக்கு - மேற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் - பாகமுகவர்கள்

# வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணியில் தீவிரமாக ஈடுபடுவீர்!

### மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர் அர.சக்கரபாணி - ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. அறிக்கை!

திண்டுக்கல், ஆக. 10 -

திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் அர.சக்கரபாணி, கிழக்கு மாவட்டச் செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

01.01.2024ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தத்தினை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருகிறது. இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, சிறப்பு சுருக்க முறை திருத்தம், 2024ன் முன் திருத்த நடவடிக்கையின் ஒருபகுதியாக, வாக்காளர்களை சரிபார்க்க அந்தந்த பகுதிகளில் உள்ள வாக்குச் சாவடிநிலை அலுவலர்களால் வீட்டுக்கு வீடு சரிபார்ப்புபணி 21.07.2023 முதல் தொடங்கப்பட்டு 21.08.23 வரை இந்தபணி நடைபெறுகிறது. வீட்டுக்கு வீடு சரிபார்ப்பு காலத்தின் போது, கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.





• வாக்குச்சாவடி அலுவலர்கள் ஒவ்வொரு வீட்டிலும் பதிவு செய்யப்பட்ட அனைத்து வாக்காளர்களின் விவரங்களையும் சரிபார்ப்பார்.

• வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விரும்பும் தகுதியுள்ள குடிமக்கள் அல்லது வாக்காளர் பட்டியலில் ஏற்கனவே இடம் பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம், திருத்தங்கள், முகவரி மாற்றம், ஆதார் எண் இணைத்தல், இடமாற்றம் செய்ய விரும்பும் வாக்காளர்கள் வீடு தேடி வரும் வாக்குச்சாவடி அலுவலர்கள் மூலம் செய்துகொள்ளலாம்.

• 01.10.2023 அன்று 18 வயது அடைய உள்ளவர்களும் வாக்காளர் பட்டியிலில் பெயர் சோக்க விண்ணப்பிக்கலாம்.

எனவே இப்பணிகளை திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டத்திலுள்ள அனைத்து மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள் மற்றும் அனைத்து வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2)ஆகியோர் இணைந்து இவ்வாய்ப்பினை பயன்படுத்தி வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விண்ணப்பித் தல், வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர் நீக்குதல், திருத்தம், முகவரி மாற்றம், ஆதார் எண் இணைப்பு போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர்கள் அமைச்சர் அர.சக்கரபாணி, ஐ.பி. செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

### முத்தமிழறிஞர் கலைஞரின் 5ஆம் ஆண்டு நினைவு நாள்!

# கடலூர் மாநகர தி.மு.க. சார்பில் அமைதிப் பேரணி - நலத்திட்ட உதவிகள்!

### மாநகரச் செயலாளர் கே.எஸ்.ராஜா - து.தங்கராசு - இள.புகழேந்தி பங்கேற்பு!

கடலூர், ஆக.10 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5ம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு, கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவுறுத்தலின்பேரில், 07.08.2023, காலை 9.30 மணியளவில், கடலூர் மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா தலைமையில், கழக அவைத் தலைவர் து.தங்கராசு, , கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி, கடலூர் மாநகராட்சி மேயர் சுந்தரி ராஜா ஆகியோர் முன்னிலையில் கடலூர் ஜுவான் பவன் இணைப்பு சாலையிலிருந்து, நினைவுநாள் பேரணி புறப்பட்டு மஞ்சக் குப்பம் மாநகர தி.மு.க. அலுவலகத்தில் நிறைவடைந்து, அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மலர்தூவி நினைவு அஞ்சலி செலுத்தப்பட்டது. காலை 11 மணியளவில் கடலூர் மாநகர திமுக சார்பில் 1000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள், மற்றும் 1000 நபர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், மண்டல குழு தலைவர்கள் சங்கீதா பிரசன்னா சங்கீதா செந்தில் முருகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வே.விக்ரமன், பொதுக்குழு உறுப்பினர் கணேசன், பகுதி செயலாளர் சலீம் நடராஜன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி தலைவர் பெரியசாமி, மாமன்ற உறுப்பினர்கள் ஆராமுது, பாலசுந்தர், சுதா, விஜயலட்சுமி, செந்தில் குமாரி, பார்வதி, கிரேசி அகஸ்டின், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் பாலாஜி, மாநகர இளைஞரணி அமைப்பாளர் ஜெயமணி, தகவல் தொழில் நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைபாளர் கார்த்திக், இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஜெயச்சந்திரன், குப்புராஜ், ராம்குமார், கோபி, மாநகர பொருளாளர் ராஜேந்திரன், மாவட்ட பிரதிநிதிகள், சி.கே.என்.ராமு, சிவா, மாரி, துர்கா செந்தில், கி.கோ. செல்வமணி,

மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் ராஜராஜன், தகவல் தொழில்நுட்ப அணி பிரவீன், மாநகர கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட பின்னர் புதுதில்லி செல்லும் இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவர்களுக்கு நேற்று முன்தினம் (8.8.2023) சென்னை விமான நிலையத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், கீழடி வரலாறு மற்றும் அகழ்வாய்வு குறித்து ஒடியா மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட காலப்பேழை (Coffee Table) புத்தகத்தை வழங்கி வழியனுப்பி வைத்தார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.8.2023) முகாம் அலுவலகத்தில், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத் தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர் த.க. தமிழ்பாரதன் சந்தித்து, இத்தாலியின் வெனீசு நகரத்தில் நடைபெற்ற கிரேக்க மொழிக் கருத்தரங்கிற்கு சென்றபோது, அதன் அருகிலுள்ள சான் லாசரோ தீவில் தமிழ் ஓலைச்சுவடிகள் இருப்பதைக் கண்டறிந்து, அதுகுறித்த அறிக்கையை வழங்கினார். இச்சந்திப்பின்போது, அண்மையில் அவரது தமிழாக்கத்தில் வெளியான அரிஸ்டாட்டிலின் இயற்பியல் நூலையும் முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (08.08.2023) சென்னை முகாம் அலுவலகத்தில், ஜெர்மனியில் ஜூலை 28 ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 6ஆம் தேதி வரை நடைபெற்ற உயரம் குறைந்தவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு சார்பில் பங்கேற்ற 7 வீரர், வீராங்கனைகள் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, தமிழ்நாடு பாரா ஒலிம்பிக் சங்க செயலாளர் கிருபாகர ராஜா, பொருளாளர் விஜய் சாரதி, துணைச் செயலாளர் செந்தில் குமார் ஆகியோர் உள்ளனர்.

### ஓராண்டில் வியக்க வைக்கும் சாதனை!

# மாணவர்களின் வாழ்க்கையை மாற்றிய மகத்தான திட்டம் ‘நான் முதல்வன் திட்டம்’ !

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, ஆக.10-

ஓராண்டில் வியக்க வைக்கும் சாதனையைப் புரிந்த மாணவர்களின் வாழ்க்கையை மாற்றிய திட்டம் தான் ‘நான் முதல்வன் திட்டம்’ என அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் குறிப்பிட்டார்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:-

நம்முடைய திராவிட மாடல் அரசின் மகத்தான திட்டமான ‘நான் முதல்வன் திட்டத்தின் ஓராண்டு நிறைவு விழா, நம்முடைய முதலமைச்சர் அவர்களின் தலைமையில், இன்று மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு - கலைஞருடைய நினைவு நாளான இன்று நிகழ்ச்சியை நடத்துவது, இந்த நிகழ்ச்சிக்குக் கூடுதல் சிறப்பைத் தருகிறது.

இந்த ஓராண்டில் ‘நான் முதல்வன் திட்டம்’ இலட்சக்கணக்கான மாணவர்களுடைய வாழ்க்கையை மாற்றியிருக்கிறது.

கடந்த ஜூலை மாதம் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், நான் முதல்வன் தொடர்பான ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சியில், பங்கேற்கும் வாய்ப்பை நான் பெற்றிருந்தேன். இந்த நான் முதல்வன் திட்டத்தின் மூலம் நூற்றுக்கணக்கான மாணவர்கள் அந்த நிகழ்ச்சியில் என்னோடு கலந்துரையாடினார்கள்.

**வியக்க வைக்கும் சாதனைத் திட்டம்!**

நான் முதல்வன் திட்டம் செய்திருக்கின்ற சாதனைகள், எங்களையெல்லாம் வியக்க வைக்கிறது. அங்கு ஆரோக்கியா ரிபெக்கா என்ற ஒரு மாணவி என்னுடன் பேசினார். கள்ளக்குறிச்சி அரசுக் கலை அறிவியல் கலைக்கல்லூரியில் அவர் பி.காம் இறுதி யாண்டு படித்து வருகிறார். ரிபெக்கா 1-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை தமிழ் வழிக் கல்வி கற்றவர்.

அன்றைய நிகழ்ச்சியில் அவ்வளவு அருமையாக, கிட்டத்தட்ட நான்கு நிமிடம் அவ்வளவு சரளமாக, தன்னம்பிக்கையோடு ஆங்கிலத்திலேயே என்னோடு உரையாற்றினார். நான் முதல்வன் திட்டத்தில் வழங்கப்படும் Language and Communication Skills Training தான் ரிபெக்காவை அப்படிப் பேசவைத்தது.



இன்றைக்குச் சகோதரி ரிபெக்கா ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் வேலைக்கும் தேர்வாகியுள்ளார். அதேபோல், கள்ளக்குறிச்சி அரசுக் கலை அறிவியல் கல்லூரியில் பி.எஸ்சி. கணிதம் படிக்கும் மாணவர் யுகேந்திர பிரசாத் பேசும்போது, அவருடைய பெற்றோர் கூலித் தொழிலாளர்கள் என்றும் சொன்னார்.

**முதல்வருக்கு நன்றி தெரிவிக்கும் மாணவர்கள்!**

பட்டப்படிப்பு என்பதே அவர்களுக்கு ஒரு மிகப்பெரிய கனவாக இருந்ததாகக் கூறினார். கல்லூரி படிக்கும்போது, நான் முதல்வன் திட்டத்தில் Tally மற்றும் MS Excell பயிற்சி பெற்றிருக்கிறார். அதன் மூலம் கல்லூரி முடித்து மாலை ஒரு டிபார்ட்மெண்ட் ஸ்டோரில் வேலை செய்கிறார். தன்னுடைய முதல் மாத சம்பளத்தில் அவருடைய அம்மாவிற்கு ஒரு கைகடிகாரம் வாங்கிக் கொடுத்தேன் என்று பெருமையாக என்னிடம் சொன்னார். இதனை அவர் உணர்வுப் பூர்வமாகச் சொன்னபோது எங்களுக்கெல்லாம் அவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தது. அவர்கள் அத்தனைப்பேரும் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குத் தங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

**1,000 பேருக்கு பணி நியமன ஆணை வழங்கியுள்ளோம்!**

இப்படி தமிழ்நாடு முழுவதும், இலட்சக்கணக்கான ரிபெக்கா மற்றும் யுகேந்திர பிரசாத் வாழ்க்கையை மாற்றியதுதான் நான் முதல்வன் திட்டம். சென்னை பல்கலைக்கழகத்தில் கடந்த ஜூன் மாதம் 10-ஆம் தேதி, நான் முதல்வன் திட்டத்தால் பயன்பெற்ற கிட்டத்தட்ட 1,000 மாணவ, மாணவிகளுக்குப் பணி நியமன ஆணைகளை நாங்கள் வழங்கினோம். ஆண்டுக்கு 6 இலட்சம் ரூபாய் முதல் 20 இலட்சம் ரூபாய் ஊதியம் வரையிலான பணிகளுக்கான நியமன ஆணைகளை அன்று நாங்கள் வழங்கியுள்ளோம்.

சென்ற மாதம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டையொட்டி நான் முதல்வன் திட்டத்தின் கீழ் நூறு வேலைவாய்ப்பு முகாம்களைத் தொடங்கி வைத்துள்ளோம்.

**பல ஆண்டு சாதனைகளை ஓராண்டில் கண்டிருக்கிறோம்!**

அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நான் முதல்வன் போட்டித்தேர்வு பயிற்சியையும் தொடங்கி வைத்தோம். ஓராண்டிலேயே, பல ஆண்டுகள் செய்ய வேண்டிய சாதனைகளை நான் முதல்வன் திட்டம் செய்து காட்டியுள்ளது.

பொறியியல், கலை அறிவியல் கல்லூரிகளில் மட்டுமே செயல்பட்டு வந்த நான் முதல்வன் திட்டம், தற்போது பாலிடெக்னிக் கல்லூரிகள், அரசுத் தொழிற்பயிற்சி நிலையங்கள், பள்ளிகளிலும் தொடங்கப்பட்டுள்ளன. நான் முதல்வன் போட்டித்தேர்வுப் பிரிவின் கீழ் இரயில்வே தேர்வு, வங்கித் தேர்வு, மத்திய பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகள் என ஒன்றிய அரசுப் பணித்தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்குக் கட்டணமின்றிப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**மதிப்பீட்டுத் தேர்வில் வெற்றி பெற்றால் ரூ.7,500 ஊக்கத்தொகை!**

ஒன்றிய அரசுப் பணித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்கள், தமிழ்நாடு அரசு நடத்துகின்ற மதிப்பீட்டுத் தேர்வில் பங்கேற்று வெற்றி பெற்றால், அவர்களில் ஆயிரம் பேருக்கு தலா 7,500 ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கப்படும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

தமிழ்நாட்டு மாணவர்கள் வெறும் மாதச் சம்பளதாரர்களாக மட்டுமில்லாமல் தொழில் முனைவோர்களாக மாறி, மற்றவர்களுக்கும் பணிவாய்ப்பை ஏற்படுத்தித் தருகின்ற திட்டமாகவும் இந்த நான் முதல்வன் திட்டம் செயல்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை நம்முடைய மாணவ, மாணவிகள், இளைஞர்கள், இளம்பெண்கள் சிறந்த முறையில் பயன்படுத்தி வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். நல்லதொரு வாய்ப்புக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

இவ்வாறு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.



**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் சோலையார்-காடம்பாறை மின் நிலையம்.**



# 30 இடம் பொருள் கலைஞர்




# சோலையார்-காடம்பாறை மின் நிலையம்

ஆட்சி அதிகாரம் யார் கையில் இருக்கிறது என்பதைப் பொறுத்துத்தான், அதன் வீச்சும், வேகமும், ஜனநாயகத் தன்மையும் இருக்கும். ஆட்சியில் இருப்பவர்களின் நோக்கம் என்ன என்பதைப் பொறுத்துத்தான், அது யாருக்காக சிந்திக்கும், செயல்படும் என்பதை அறிந்துகொள்ள முடியும். இதற்கு உலக அளவிலான வரலாற்றினை உதாரணமாகக் காட்டுவதைவிட, தமிழ்நாட்டு வரலாற்றில் இருந்தே அறிந்துகொள்ளலாம்.

சுதந்திரத்துக்குப் பின்னர், ஆட்சிப் பொறுப்பேற்ற மாநில அரசுகளில் எத்தனை மாநிலங்கள் முன்னோடியான திட்டங்களைத் தொடங்கியுள்ளன எனத் தேடினால், குறிப்பிடத்தக்கவை எதுவுமில்லை. ஆனால், அந்த வரலாற்றினை தமிழ்நாட்டில் காணலாம்.

## கலைஞரின் பங்களிப்பு

1967-ஆம் ஆண்டில், தமிழ்நாடு தொடங்கி வைத்த ஜனநாயகப் புரட்சிதான், இந்தியாவுக்கே வழிகாட்டியாக இருந்தது. தமிழ்நாட்டின் இருள் விலகவும் காரணமாக அமைந்தது. உண்மைதான், தமிழ்நாட்டின் இருளை அகற்றும் முயற்சியில், யார் முன்நின்றாலும் அதைத் தனது பணியாக ஏற்றுக் கழகம் தொடர் ஓட்டத்தினைத் தொடங்கி இருக்கிறது. அதன் பெருமைமிகு அடையாளமாகப் பரம்பிக்குளம்- ஆழியார் திட்டத்தில் கலைஞரின் பங்கினைக் காணலாம்.

தமிழ்நாட்டின் மிக முக்கிய சுற்றுலாத்தலமாக வால்பாறையை நாம் அறிவோம். ஆனால், அங்கு கலைஞர் செய்த சாதனை, கழகத்தினரே அறியாத வரலாறு என்று சொல்லலாம். 1967-ஆம் ஆண்டிலேயே 2 கிலோ மீட்டர் நீளத்துக்கு மலையைக் குடைந்து, வாகனம் செல்லும் அளவுக்குக் குகை அமைத்து, அதன்மூலம் நீரை எடுத்துச் சென்று மின் உற்பத்தி செய்ததெல்லாம் அர்ப்பணிப்பான செயல்களாகச் சொல்லலாம்.

## அசாத்தியமான திட்டம்

பரம்பிக்குளம் - ஆழியார் பாசனத் திட்டத்தை 1961-ஆம் ஆண்டில், பெருங்கனவோடு தொடங்கியவர், கர்மவீரர் காமராஜர். ஆனால், திட்டத்தைத் தொடங்கிய பின்னர் அவர் ஆட்சியில் இல்லை. தவிர நிதிப் பற்றாக்குறையும், உணவுப் பஞ்சமும் தலைவிரித்தாடிய தமிழ்நாட்டில், திட்டத்தினை நிறைவேற்ற முடியவில்லை.

> நீர்வளம்-நீர்மேலாண்மை-அதற்கான கட்டமைப்பு உருவாக்கம் குறித்த விழிப்புணர்வை இளைய தலைமுறையினர் பெறும் வகையில், பரம்பிக்குளம் ஆழியாறுத் திட்டம் தொடங்கப்பட்ட அக் 7-ஆம் தேதி, ஆண்டுதோறும் கொண்டாடப்படும் என்றும், பெருந்தலைவர் காமராஜர் உள்ளிட்ட மூத்தோரை நினைவுகூர்வோம் என்றும் அறிவித்திருக்கிறார் நமது முதலமைச்சர்.

கருத்தாக்கம், கற்பனைத் திறன், அணுகுமுறை, திட்டமிடுதல், புத்திசாலித்தனம், இரண்டு மாநிலங்கள் இடையே புரிந்துணர்வு என எல்லாவற்றிலும் அசாத்திய துணிச்சல்கொண்ட, தனித்துவமான திட்டமாக அது இருந்தது. அதன்மூலம் தமிழ்நாட்டின் கோவை, ஈரோடு மாவட்டங்களின் நீர்த் தேவைகள் பூர்த்தியாகும். ஆனைமலைத் தொடரில், 3,800 அடி மற்றும் 1,050 அடி எனப் பலவகையிலான உயரங்களில் இருந்து, மேற்கு நோக்கி செல்லும் ஆறுகளைத் தமிழ்நாட்டுக்குத் திருப்பும் திட்டம் இது.

சோலையார், ஆழியார், நீரார் என முக்கிய ஆறுகளைத் தமிழ்நாட்டுக்குத் திருப்பும், நீண்ட கால பெரும் திட்டமாக பரம்பிக்குளம் - ஆழியார் திட்டம் இருந்தது. இந்தத் திட்டம் 10 அணைகள், 4 மின் உற்பத்தி நிலையங்கள், 6 முக்கிய சுரங்கப் பாதைகள், 7 நீர்ப்பாசனக் கால்வாய்கள் ஆகியவற்றைக் கொண்டது.

## சாத்தியமாக்கிய கலைஞர்

இந்தத் திட்டங்களின்படி, வால்பாறையில் நீரார் அணையைக் கட்டினார் காமராஜர். கழகம் ஆட்சிக்கு வந்தபின்னர்தான், அந்த அணையின் தண்ணீர் தமிழ்நாட்டுக்குச் சொந்தமானது. 1967-இல், பேரறிஞர் அண்ணா, தனக்கு நெருக்கமான தம்பிகளில் ஒருவரான கலைஞரை பொதுப்பணித்துறை அமைச்சராக்குகிறார். எதிர்கால தமிழ்நாடு குறித்த லட்சியவேட்கை கொண்ட கலைஞர்தான் பரம்பிகுளம்-ஆழியார் திட்டத்தினை, ஆமை வேகத்தில் இருந்து அசுர வேகத்தில் செயல்படுத்தினார்.

நீரார் அணையின் மதகுகளைத் திறந்தால், அந்த நீர் கேரளாவின் அதிரப்பள்ளி நீர்வீழ்ச்சிக்குச் செல்லும். தமிழ்நாட்டுக்குப் பயன் இல்லை. எனவே அணைக்கு எதிர்புறமாக மலையைக் குடைந்து 2 கிலோ மீட்டர் நீளத்துக்குச் சுரங்கம் அமைத்து நீரை சோலையார் அணைக்குக் கொண்டு வந்தார். 20 அடிக்கு 20 அடி என்ற அளவில், D போன்ற வடிவத்தில் அந்தச் சுரங்கம் அமைக்கப்பட்டது. அந்தச் சுரங்கப்பாதையில் வாகனம் மூலம் சென்று, பராமரிப்புப் பணிகளைச் செய்ய முடியும்.

பேரறிஞர் அண்ணா மறைந்து, கலைஞர் முதலமைச்சராகப் பதவி ஏற்றபின்னர், பொதுப்பணித்துறை அமைச்சராக சாதிக்பாட்சா இந்தத் திட்டத்தினை முன்நின்று கவனித்தார். இந்த மாபெரும் பணிகளில் முதற்கட்டம் நிறைவடைந்து, 1971-ஆம் ஆண்டில் கலைஞர் திறந்து வைத்தார்.

தண்ணீர் மலையை விட்டு வெளியேறும் அதே பாதையில், நீர் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்ட பின்னர், திறந்த வெளிக் கால்வாய்கள் மூலம் சோலையார் அணைக்குச் சேர்கிறது. அந்த மின் உற்பத்தியின் அலகுகள்தான் சோலையார் மின் நிலையம்-1 மற்றும் 2 ஆகிய மின் நிலையங்கள். இதன் மூலம் 70 மெகாவாட் மின் உற்பத்தி தொடங்கப்பட்டது. தொடர்ந்து, காடம்பாறை மின் திட்டத்துக்கான பணிகளையும் செய்தவர் கலைஞர்.

## முன்மாதிரிப் பணிகள்

1971-ஆம் ஆண்டில் தொடங்கி வைக்கப்பட்ட இந்தத் திட்டம்தான் இந்தியாவுக்கே முன்மாதிரியான நீர் மின் திட்டமாக முதன்முதலில் அமைந்தது. பேரறிஞர் அண்ணாவின் ஆட்சியில் பொதுப்பணித்துறை அமைச்சராகத் திட்டத்தைத் தொடங்கி வைத்து, 1971-ஆம் ஆண்டு முதலமைச்சராகச் சென்று அந்தத் திட்டத்தைத் திறந்து வைத்தவர் கலைஞர். பரம்பிக்குளம் - ஆழியார் திட்டங்களுக்கு 1969 மற்றும் 70-ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு-கேரளா இரண்டு மாநிலங்களுக்கு இடையே கையெழுத்தானது.

இந்தப் பாசனத் திட்டங்கள்தான் கோவை, பொள்ளாச்சி பகுதிகளில் இன்றைய வளர்ச்சிக்கும், செழிப்புக்கும் காரணமாக இருந்தவை. பெருந்தலைவர் காலத்தில் இந்தத் திட்டத்தை யோசித்தாலும், கலைஞரின் முனைப்பும், உழைப்பும்தான் திட்டத்தைச் செயல்பாட்டுக்குக் கொண்டு வந்தது. காமராஜருக்குப் பின் அணைகளே கட்டவில்லை, தி.மு.க. ஆட்சியில் மின் உற்பத்தித் திட்டங்களே உருவாக்கப்படவில்லை எனத் திட்டமிட்டு பொய் பரப்பப்பட்டு வருகிறது. ஆனால், கலைஞர் ஆட்சி காலத்தில்தான் நீர்ப்பாசனமும், மின் திட்டங்களும் அதிகமாகக் கொண்டுவரப்பட்டன என்பதற்கு, அவரின் ஆட்சியின் தொடக்கக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களே சான்றாக உள்ளன.

திட்டம் யார் கொண்டுவந்தால் என்ன, அவை தமிழ்நாட்டுக்கு நன்மை தரும் எனில், கலைஞர் எதற்கும் துணிந்தவர் என்பதற்குப் பரம்பிக்குளம் - ஆழியார் திட்டத்தின் பணிகள் என்றென்றைக்கும் சாட்சியாக இருக்கும்.

...வலம் வருவோம்

## வேற்றுமையில் தான் ஒற்றுமை!




பா.ஜ.க. முன்னெடுக்கும் பாசிச அரசியல், அறிவுத் தளத்தில் பல திரிபுகளைச் செய்துகொண்டே இருக்கிறது. ஒரு பக்கம் போலியான வரலாறுகளை எழுதிக் குவித்துக் கொண்டிருக்கிறார்கள், இந்துத்துவவாதிகள். இன்னொருபுறம் என்.சி.இ.ஆர்.டி (NCERT) பாடப்புத்தகங்களில் வரலாறு நீக்கம் நடைபெறுகிறது. இந்திய அளவில் இஸ்லாமிய நகரங்களின் பெயர்மாற்றம் பாரபட்சமின்றித் தொடர்ந்த வண்ணம் இருக்கிறது. இந்துத்துவ நாகரிகம்தான் இந்திய நாகரீகமென வரலாற்றை, இவர்கள் கட்டமைக்கத் தொடர்ந்து முயன்று கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் ‘தி இந்தியன்ஸ்: ஹிஸ்டரீஸ் ஆஃப் ஏ சிவிலைசேஷன்’ (The Indians: Histories of a Civilization) என்ற நூல் சமீபத்தில் வெளியாகி இருக்கிறது. இந்தியாவின் பன்மைத்துவ வரலாற்றைப் பல்துறை வல்லுநர்களின் கள ஆராய்ச்சிக் கட்டுரைகளின் துணைகொண்டு இந்நூல் நமக்கு வழங்குகிறது. பா.ஜ.க. முன்னெடுக்கும் ஒற்றைத்துவத்துக்கு எதிராக அறிவுத்தளத்தில் மேற்கொள்ளப்படும் மிக முக்கிய நடவடிக்கையாக இதைக் காணலாம். இந்தியா முழுக்க இருக்கும் ஆய்வாளர்கள் இம்முயற்சியை முன்னெடுத்து அதில் வெற்றியும் கண்டிருக்கின்றனர். பல்வேறு கலாச்சாரங்களையும் பல்வேறு மொழிகளையும் பல்வேறு நம்பிக்கைகளையும் பின்பற்றும் இந்திய ஒன்றிய மக்களின் வரலாறு, எல்லாத் தரப்பு மக்களையும் ஒன்றிணைத்துச் செல்ல வேண்டும் என்ற செய்தியைத்தான் இந்நூல் நமக்களிக்கிறது. **‘இந்தியா என்பது ஒரு மழைக்காடு’** என்பதை இந்நூல் நிரூபணம் செய்கிறது. ஜி.என்.தெவி, டோனி ஜோசப், ரவி கொரிசெட்டர் என இந்தியாவின் முன்னணி வரலாற்றாசிரியர்கள் இந்நூலைச் செம்மையாகத் தொகுத்துள்ளார்கள்.

**‘வேற்றுமையில் ஒற்றுமை’** என்ற காலம் கனிந்திருப்பதை இந்நூலைப் படிப்பதன் மூலம் உணரலாம்.

## :ப்ளாஷ்பேக்





முருகேசன்

### தொடர் ஓட்டம்!

1993-ஆம் ஆண்டு கழகம் பிளவைச் சந்தித்து நெருக்கடிக்கு உள்ளாகி இருந்தது. அப்போது தஞ்சாவூர் மாவட்டத்தில், 1993-ஆம் ஆண்டு டிசம்பர் 30-ஆம் தேதி மதியம் கழகப் பொதுக்குழுக் கூட்டமும், அதைத் தொடர்ந்து அன்று இரவே தஞ்சை திலகர் திடலில் மாபெரும் பொதுக்கூட்டமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நாங்கள் 16 பேர் இளைஞர் அணி சார்பாக ஆலங்குடியிலிருந்து தஞ்சாவூர் மாநாட்டுப் பந்தல் வரை ஜோதியைச் சுமந்து தொடர் ஓட்டம் மேற்கொண்டோம். கிட்டத்தட்ட 60 கி. மீ தூரத்தை 16 பேரும் தலா 5 கி.மீ என்ற வீதத்தில் ஓடி, இலக்கை அடைந்து தலைவர் கலைஞரிடம் ஜோதியை ஒப்படைத்தோம். இளைஞர் அணியின் இச்செயலைக் குறிப்பிட்டுப் பாராட்டினார். இந்நிகழ்வை இன்றைக்கு நினைத்தாலும் மெய்சிலிர்க்கிறது.

**-எஸ்.ஆர்.முருகேசன்**
**ஆலங்குடி நகர இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர், ஆலங்குடி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை- 600 018.
வாட்ஸ்அப் எண்: 90033–24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கழகம் சமாளிக்கும்!

**1977-ஆம் ஆண்டு, தி.மு.க. தேர்தல் கூட்டணி குறித்துப் பேச்சு எழுந்தது. அப்போது பேசிய கலைஞர், “தோழமைக் கட்சிகளின் தேர்தல் உறவை முறித்துக் கொள்ள, எந்த நேரத்திலும் கழகம் காரணமாக இருந்ததில்லை. தேர்தல் உறவு கொண்ட தோழமைக் கட்சிகளின் வெற்றிக்குக் கழகம் உணர்வுப்பூர்வமாக உழைத்து வந்துள்ளது. அதற்குக் கிடைக்கும் பரிசுகளையும், அது மனம் புண்படாமல் ஏற்றுக்கொண்டு இருந்திருக்கிறது. எந்த நிலைமையையும் கழகம் சமாளிக்கும்” என்றார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 205




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131